# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 11

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

July 2016 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 3


# நீதிமன்ற செயல்முறையை நீர்த்துப்போகச் செய்வதும் சட்டவிரோதமாக சிறையிலடைப்பதும் நிறுத்தப்படவேண்டும்

நீதிமன்ற கட்டமைப்பை மேம்படுத்தவும் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 3 கோடியையும் தாண்டிவிட காரணமான நீதிபதிகள் பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்குமாறும் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் சி ஜெ தாக்கூர் அவர்கள் உணர்ச்சிபொங்கும் முறையில் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பெரும் நிலுவையிலுள்ள வழக்குகள், நீதிபதிகள் பற்றாக்குறை மற்றும் அரசாங்கத்தின் செயலின்மையால் நீதித்துறை சந்தித்துவரும் 'இயலாச்சுமை'யை விளக்கிட 1950ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் துவங்கப்பட்ட நாள் முதற்கொண்டு வழக்குகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருவதை வருடாந்திர மாநில தலைமை நீதிபதிகள் மற்றும் முதலமைச்சர்கள் மாநாட்டில் பிரதம மந்திரி மற்றும் மாநில முதலமைச்சர்கள் முன்னிலையில் நீதிபதி தாக்கூர் அவர்கள் உணர்ச்சி பொங்க விவரித்துக்காண்பித்தார்.

குறைந்தபட்சம் 40,000த்திற்கும் மேற்பட்ட நீதிபதிகளை நியமிக்க 1987லிலேயே சட்டகமிஷன் பரிந்துரைத்துள்ளது. அவ்வாறு செய்தால் தற்போதைய 10லட்சம் பேருக்கு 10 நீதிபதிகள் என்ற எண்ணிக்கை 50ஆக உயரும் என அவர் மேலும் சுட்டிக்காண்பித்தார். கீழ் நீதிமன்றம் துவங்கி உச்சநீதிமன்றம்வரை சராசரியாக 2600 வழக்குகளை ஒரு நீதிபதி தீர்த்துவைக்க வேண்டியதிருக்கிறது. அதே சமயம் யுஎஸ்ஏ–வில் ஒரு நீதிபதி 81 வழக்குகளைத்தான் கையாளுகின்றார். இங்கே கண்ணுக்கு எட்டியவரை தீர்வு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

நீதிபதிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்காததால் பெரும் எண்ணிக்கையில் தேங்கிக்கிடக்கும் வழக்குகளை கையாள முடியாமல் பல பத்தாண்டுகளாக நீதித்துறை பீடிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சி புரிந்த முந்தைய அரசாங்கங்களேயென குற்றஞ்சாட்டியதுடன் அவர் கனத்த குரலில், "ஒரு வழக்காடி அல்லது வழக்கு முடிக்கப்படாமல் சிறையில் வாடும் லட்சக்கணக்கானவர்களின் சார்பாக மட்டுமல்லாது நாட்டின் வளர்ச்சி மற்றும் அதன் முன்னேற்றத்தை முன்னிட்டும் இச்சூழ்நிலைமையை சரிசெய்ய முன்வருமாறும் வெறுமனே விமர்சிப்பது மட்டும் போதுமானதல்ல என உணர்ந்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் முழுச்சுமையையும் நீதித்துறையின்மீது சுமத்திட முடியாது" எனக் கூறினார். இந்த ஒட்டுமொத்த நீதியமைப்பே எவ்வாறு பேரழிவிற்கு சென்றுகொண்டிருக்கின்றது என்பதைக்கண்ட அவரது உணர்ச்சியானது நீதித்துறையின் மிக உயர்ந்த பதவியிலிருக்கும் ஒருவரையே நிலைகுலையச் செய்திருப்பது மட்டுமின்றி அதனால் அவர் எவ்வாறு மனமுடைந்து போயிருக்கின்றார் என்பதற்கான தெளிவான சாட்சியாகும்.

காலதாமதம் மட்டுமல்ல, வழக்குகளை தரப்பட்ட கால அவகாசத்திற்குள் வழங்கப்படும் தீர்ப்புகள் பெரும்பாலும் தகுதியினடிப்படையில் வழங்கப்படுகின்றதா அல்லது போதிய கால அவகாசமின்றி அவசர அவசரமாக குறைபாடான தீர்ப்புகளாக வழங்கப்படுகின்றதா என்ற கேள்விகளும்கூட எழுப்பப்படுகின்றன.

உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கை ஒரு நீதிபதி விசாரிக்க செலவிடும் நேரம் சராசரியாக 5 நிமிடத்திற்கும் குறைவே என நீதிபதிகளின் வேலை அழுத்தம் குறித்து ஆய்வுசெய்யும் பெங்களூரைச் சேர்ந்த ஒரு அரசு சாரா அமைப்பு கூறுகிறது. "நாட்டில் மிகுந்த அழுத்தமில்லாத உயர் நீதிமன்ற நீதிபதி ஒரு வழக்கை விசாரிக்க 15–16 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளும்போது, பணிச்சுமையுள்ள நீதிபதிக்கு ஒரு வழக்கிற்கு 2.5 நிமிடங்கள் ஆகிறது. சராசரியாக, ஒரு வழக்கை முடிக்க அவர்களுக்கு 5லிருந்து 6 நிமிடங்கள் ஆகிறது" என அந்த ஆய்வு மேலும் கூறுகிறது. அந்த ஆய்வின்படி உயர் நீதிமன்றங்களில் ஒரு வழக்கை முடிக்க சரா

தொடர்ச்சி 2ம் பக்கம்

# அதிகரித்துவரும் வன்முறையும் பெண்களின் பாதுகாப்பும்

கடந்த சில மாதங்களாக தமிழகத்தில், குறிப்பாக தலைநகர் சென்னையில் தொடர் படுகொலைகள் அரங்கேறி வருகின்றன. அரசு அதிகாரிகள், வழக்கறிஞர்கள், தகவல் அறியும் உரிமை ஆர்வலர், இளம் பெண்கள் மீதான சமீபத்திய வன்முறைகளும் தருமபுரி இளவரசன், ஓமலூர் கோகுல்ராஜ், உடுமலைப் பேட்டை சங்கர் என கடந்த ஆண்டுகளின் ஆணவக்கொலைகளும் பட்டியலில் அடங்காது அதிகரித்துவருகின்றன. தொடர் படுகொலை சம்பவங்கள் மக்கள் கூடும் பொது இடங்களில் பட்டப்பகலிலேயே நடைபெற்றுவருவதைக்கண்டு பொதுமக்கள், பல்துறை அறிஞர்கள் மட்டுமல்லாது உயர்நீதிமன்ற நீதிபதிகளும் தங்களது அதிர்ச்சியையும் கண்டனத்தையும் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாகப் பெண்கள் மீதான வன்முறையானது சற்றும் குறையாது மிகக் கொடூரமாக அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கடந்த ஜூன் 24ம் தேதி காலை 6.30 மணியளவில் சென்னை புறநகர் பரனூரில் சாப்ட்வேர் இன்ஜினியராக பணிபுரியும் சுவாதி என்ற இளம்பெண் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். சென்னை நுங்கம்பாக்கம் ரயில்நிலைய பிளாட்பாரத்தில் ரயிலுக்காகக் காத்திருந்தபோது பலர் முன்னிலையிலேயே படுகொலை செய்யப்பட்டார். அதேபோல தனது முகத்தைப் பயன்படுத்தி ஆபாசமாக மார்ஃபிங் செய்து இணையதளத்தில் பரப்பியதால் சேலம் மாவட்டம் இடங்கணசாலையைச் சேர்ந்த வினுப்ரியா என்ற இளம் ஆசிரியை அவமானமுற்று தற்கொலை செய்துகொண்டார் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு தமிழகத்தில் தலைவிரித்தாடும் பல்வேறு படுகொலைகள், இளம்பெண்கள் மீதான பாலியல் குற்றங்களின்மீது காவல்துறை எடுக்கும் நடவடிக்கை குறித்து பல்வேறு கேள்விகளும் விமர்சனங்களும் கண்டனங்களும் எழுந்துவருகிறது. உதாரணமாக டிஎஸ்பி விஷ்ணுப்ரியா தற்கொலை விவகாரத்தில் தமிழக போலீசார் உரியமுறையில் விசாரணை நடத்தவில்லை எனக்கூறி அவரது தந்தை சிபிஐ (CBI) விசாரணை கோரியதன்பேரில் சென்னை உயர்நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. அடுத்து கள்ளக்குறிச்சி அருகிலுள்ள எஸ்விஎஸ் யோகா–இயற்கை மருத்துவ கல்லூரியின் 3 மாணவிகளின் மர்ம மரணத்தில் தொடர்புடையதாகக் கூறி மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையில் உரிய ஆதாரங்கள் இன்னும் சமர்ப்பிக்கப் படவில்லை. இவ்வாறான சம்பவங்களில் காவல் துறையின் செயல்பாட்டைப் பார்க்கும்போது சட்டம்–ஒழுங்கை பாதுகாக்கத்தான் காவல்துறை இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

சுவாதி கொலை செய்யப்பட்டதற்கான உறுதியான காரணம் தெரியாத நிலையிலேயே இச்சம்பவத்திற்கு ஜாதி சாயம், மதச்சாயம் பூசி சமூக வலைத்தளங்களில் சிலர் திட்டமிட்டு கருத்துக்களை வெளியிடுவதும் அக்கருத்துக்களை பகிர்வதும் மிகமிகக் கண்டிக்கத் தக்கதாகும். இதுபோன்ற எந்தத் துயர சம்பவங்கள் நேர்ந்தாலும் அதை உடனடியாக பயன்படுத்திக் கொண்டு ஜாதிவெறி–மதவெறியைத் தூண்டி சமூகத்தை ரத்தவெள்ளத்தில் ஆழ்த்துவதை எப்போதுமே நோக்கமாகக் கொண்டு சில சக்திகள் செயல்பட்டுவருவதை யாரும் மறுக்கமுடியாது. சுவாதி கொலை விஷயத்தில் ஜாதி, மதத்தைக் கடந்து மக்கள் தமது கண்டனத்தை ஒருமித்து, ஒரே குரலில் ஒலித்ததைக்கண்டு அத்தகைய மதவெறி சக்திகள் மிகுந்த எச்சரிக்கை கொண்டு அவ்வொற்றுமையை குலைக்கவே இவ்வாறு செய்ததாகத் தோன்றுகிறது. அத்தகைய சக்திகளின் செயல்தானா இது என்பதை கண்டறிந்து அது உண்மையானால் யாராக இருந்தாலும் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சேலம் மாவட்டத்தை சேர்ந்த வினுப்ரியா விஷயத்தில் மட்டுமல்லாது, பெண்கள் மீதான வன்முறைக்கும் பல்வேறு கொலைகளுக்கும் காரணம் போலீஸாரின் அலட்சியமே என பலதரப்பிலிருந்தும் கூறப்படுகிறது.

### குற்றங்களின்பால் காவல்துறையின் அணுகுமுறை

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வினுப்ரியா விவகாரத்தை எடுத்துக்கொள்வோம். மகளின் முகம் மார்ஃபிங் செய்யப்பட்டது சம்மந்தமாக புகார் அளிக்கச்சென்ற தன்னிடம் போலீஸார் அவமரியாதையாக நடந்துகொண்டதாகவும் புகாரைப் பதிவுசெய்ய லஞ்சமாக செல்போன் ஒன்று கேட்டதாகவும் மார்ஃபிங் செய்யப்பட்ட முகநூல் பக்கத்தை முடக்க 20 நாட்களாகும் எனவும் கூறியதாக வினுப்ரியாவின் தந்தை குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொடர்ச்சி 3ம் பக்கம்

# தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்

1ம் பக்கத் தொடர்ச்சி

சரியாக 1,141 நாட்களும் மாவட்ட நீதிமன்றங்களில் 2,184 நாட்களும் ஆகின்றன என்ற உண்மையைக் கொண்டு இப்பிரச்சினையின் ஆழத்தை புரிந்து கொள்ளலாம் (Times of India 7.4.16).

எல்லாவற்றிற்கும் மேலாக, நீதித்துறையின்பால் அரசாங்கத்தின் அக்கறையற்றத்தன்மை குறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பேசியிருப்பது இது முதல் தடவையல்ல. பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள 31.28 மில்லியன் வழக்குகளை முடிக்க 320 ஆண்டுகள் ஆகும் என 2010ம் ஆண்டு ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் வி வி ராவ் அவர்கள் கூறியுள்ளார். 2013ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அல்டமாஸ் கபீர் அவர்கள் ஒரு மில்லியன் பேருக்கு அடுத்த 5 வருடங்களுக்குள் குறைந்தபட்சம் 50 நீதிபதிகள் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் அப்போதைய பிரதமர் திரு மன்மோகன் சிங் அவர்களுக்கு கடிதம் எழுதினார்.

2014ம் ஆண்டு அப்போதைய தலைமை நீதிபதி ஆர் எம் லோதா அவர்கள் “நீதித்துறையை உற்பத்தியில் ஈடுபடாத அரசின் ஓர் அங்கமென அரசாங்கங்கள் கருதுகின்றன. நீதித்துறைக்கு செலவு செய்வதில்லை. பட்ஜெட்டிலிருந்து நீதித்துறைக்கு 0.5% க்கும் குறைவாகவே செலவு செய்யப்படுகிறது. 2014–15ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் ரூ17.60லட்சம் கோடியில் சட்டம் மற்றும் நீதிக்கு 0.11% ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. புதிய அரசாங்கம் நீதித்துறைக்கு அதிக கவனம் கொடுக்கும் என நம்புவோம்” என ஊடகங்களிடம் கூறினார்” (Hindustan Times & The Hindu - 25.4.16).

இப்படிப்பட்ட மோசமான நிலைமையின் விளைவாக மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர் சாதாரண மக்களேயாகும். காரணம், பெரும் தொழிலதிபர்கள், மிகப்பெரும் கார்ப்பொரேட் நிறுவனங்கள், உயர் பதவியிலிருப்பவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பணம்படைத்த மேல் தட்டு மக்கள்யாவரும் தாக்கல் செய்யப்பட்ட அதே நாளிலேயே உரிய நேரத்தில் தங்கள் வழக்குகள் விசாரிக்கப்படுவதற்கும் விரைவாக தீர்ப்பு வழங்கிடவும் பணம் செலவிட முடிவதுபோல் சாதாரண மக்களால் முடிவதில்லை. எனவே, பணம் படைத்தவர்களே சட்டத்தையும் நீதிமன்றத்தையும் எதிர்கொள்ளமுடியுமென்பது சொல்லாமலே விளங்கும்.

விசாரணைக்கு வராததாலோ அல்லது ஏற்றுக் கொள்ளமுடியாத காரணங்களைக் கூறி திரும்பத் திரும்ப விசாரணை தள்ளிவைக்கப்படுவதாலோ எண்ணற்ற அரசியல் கைதிகள் உட்பட ஏராளமான விசாரணைக் கைதிகள் வருடக்கணக்கில் அல்ல, பத்தாண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். பல நேரங்களில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தங்களுடைய வழக்கின் தீர்ப்பை அறியாமலேயே சிறையில் இறந்தேவிடுகிறார்கள். வேலை சம்மந்தப்பட்ட பிரச்சினைகள், சம்பள நிலுவைத்தொகை வழங்குதல் தொடர்பான சச்சரவுகள், பணிநிறைவுப்பயன்கள் ஆகிய தங்களின் இன்னும்பல நியாயமான உரிமைகளைக் கோருபவர்களுக்கு அவர்கள் இறந்தபின்புதான் அவர்களின் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப் படுகின்றன. இது போன்ற நிகழ்வுகள் எண்ணிக் கையில் அதிகரித்தவண்ணம் இருக்கின்றன.

பல்வேறு வகைப்பட்ட விசாரணைக் கைதிகளில் 64 சதவீதத்தினர் குற்றவாளி என்று நிரூபிக்கப் படாத நிலையிலேயே அவர்களுடைய அனைத்து அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டு சிறை வாசம் அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஒரு விசாரணைக் கைதிக்கு 12 வருடங்களுக்கு பின் ஜாமீன் வழங்கியபோது 2013ல் உச்ச நீதிமன்றம் கூறியதாவது; “கவனக்குறைவால் குடி மக்களை சிறையில் தள்ளுதல் என்பது சிறைவாசம் தரும் வேதனையை நாங்கள் சீர்தூக்கிப்பார்க்காம விருப்பதையே பிரதிபலிக்கின்றது ; அவர்களை அப்படியே சிறைவாசம் அனுபவிக்க விட்டுவிட்டு அக்கறையில்லாமலிருப்பது மானுடத்தின் மீது நாங்கள் பற்றில்லாமலிருப்பதையே பிரதிபலிக் கின்றது. சிறைச்சாலைகள் அளவுக்கு மீறி நிரம்பி வழிவது எங்களின் ஞானமின்மையையும்கூட பிரதிபலிக்கின்றது. வழக்கு நடைபெறும்போது ஒருவர் அனுபவிக்கும் சிறைவாசம் ஒரு குற்றம் புரிந்த ஒருவர் தண்டிக்கப்பட்டு அனுபவிக்கும் சிறைவாசத்தைவிட சற்றும் குறைந்ததல்ல. ஏனெனில், சிறைக்குச் சென்றாலேயே குற்றவாளி யெனக் கருதும் இச்சமுதாயத்தின் கண்கள் அவ்விரண்டையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. விசாரணைக் கைதிகள் அவ்வாறு வெகுகாலம் சிறையிலிருப்பது இந்த நீதிமன்றம் கேள்வியெழுப்பிய பின்புதான் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது. அதன் பின்னர் அதுவும் உடனேயே பழையபடி கிடப்பில் போடப்படுகின்றது ”.

இதைவிட வெட்டவெளிச்சமானது வேறு எதுவாக இருக்கமுடியும்? விசாரணைக் கைதிகளில் பெரும்பான்மையினர் ஏழைக் குடும்பங்களிலிருந்து வந்தவர்களாகவோ எழுத்தறிவற்றவர்களாகவோ அல்லது அரைகுறை எழுத்தறிவுள்ளவர்களாக வோதான் இருக்கிறார்கள் என்று 2011ல் மேற் கொள்ளப்பட்ட மற்றொரு ஆய்வு கூறுகிறது. மொத்த குடும்பமும் சாப்பாட்டிற்கு நம்பியிருக்கும் ஒருவரை விசாரணையின்றி பல ஆண்டுகள் சிறைக்காவலில் வைக்கும்போது அவருடைய குடும்பம் சுடுகாட்டை நோக்கிய பயணத்தை துவக்கவேண்டியதுதான். மேலும் இப்படிப்பட்ட கைதிகள் அவ்வப்போது வெறுமனே குற்றச் சாட்டின் பேரிலேயே உரிய விசாரணை ஏதுமின்றி சிறைச்சாலையில் தள்ளப்படுகிறார்கள். இதுபோன்ற கைதுகளின் விளைவுகள் சிறைக்கைதிகளுக்கு பயங்கரமானதாக இருக்கின்றன. அவர்கள் அவமானப்படுத்தப்படுகிறார்கள், சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். வறுமை பீடிக்கப் பட்ட அவர்களது குடும்பம் அவமதிக்கப்படுகிறது, சிறுமைப்படுத்தப்படுகிறது, துன்புறுத்தப்படுகிறது. நீதிமன்ற வழக்குகளை முடித்துவைப்பதில் ஏற்படும் தாமதத்தால் உருவாகும் அபாயகரமான சமூக பாதிப்பென்பது இதுதானாகும். “உலகின் மிகப்பெரிய ஜனநாயக”த்தில் உழைக்கும் மக்கள், குறிப்பாக ஏழை மக்கள் சந்திக்கும் நிலைமை இதுதான். இங்கு ஆட்சியாளர்கள் நீதித்துறையின் செயற்போக்கை அல்லது நீதி வழங்கும் முறையை மேம்படுத்துவது குறித்து கவலை கொள்ளாதது மட்டுமல்ல, அவர்கள் திட்டமிட்டமுறையில் அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பறிக்கிறார்கள், ஜனநாயக நியதிகள், கோட்பாடுகள், நடைமுறைகள் அனைத்தையும் காலிலிட்டு மிதிக்கிறார்கள், மிகுந்த ஜனநாயக விரோதமாக போலீஸ் நிர்வாகத்தை ஆக்குகிறார்கள், எதேச்சதிகாரமாக இல்லாவிட்டா லும், கொடூரமானதாக ஆக்குவதன்மூலம் பூர்ஷ்வா ஜனநாயகத்தை முற்றிலும் கேலிக்குரியதாக்கி விட்டார்கள்.

சுதந்திரம் அடைந்த நாள்முதலாக, ஆளும் பூர்ஷ்வா கட்சிகள் அனைத்தும் ஆளும் ஏகபோகங்களின் கட்டளையைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு சேவை செய்யும் முயற்சியில் அதிகாரத்தைப் பற்றிநின்று காலங்காலமாகவுள்ள சட்டங்கள் அனைத்தையும் வளைக்கும் ஒரு மரபை ஏற்படுத்திவிட்டார்கள், அவர்களுக்கு கீழ்படிந்து நடக்கக்கூடியதாக போலீஸ் நிர்வாகத்தை மாற்றி விட்டார்கள். ஆக, எவரெல்லாம் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமோ மற்றும் எவரெல்லாம் சட்டம் ஒழுங்கினை பாதுகாத்திட வேண்டுமோ அவர்களெல்லாம் ஆளும் வர்க்கத்திற்கு அடிபணியும் சேவகர்களாக ஆகிவிட்டனர்.

மறுபுறம் சித்தாந்தரீதியில் திவாலாகிப்போன இந்த ஆளும்கட்சிகள் தங்களுக்கான செல்வாக்கு மண்டலங்களை உருவாக்கவும் தக்கவைக்கவும் குண்டர் பலத்தையும் கிரிமினல்களையும் சார்ந்திருக்கிறார்கள். இந்த கிரிமினல்களும் சமூக விரோதிகளும் தங்களுக்கு பாதுகாப்பையும் கேடுகெட்ட, சட்டவிரோத காரியங்கள்மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய இந்த அல்லது அந்த ஆளும் கட்சியின் பின்னால் அணிவகுக்கிறார்கள். எனவே, இந்த குண்டர்கள், கிரிமினல்களுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதிலிருந்து போலீஸ் நிர்வாகத்தை ஆளும்கட்சியின் தலைவர்கள் தடுத்து, அவர்கள் அனைத்துவிதமான சமூக விரோத, கிரிமினல் நடவடிக்கைகளை மேலும் வெளிப்படையாக மேற்கொள்ள அனுமதிக்கிறார்கள்.

ஜனநாயக வெகுஜன இயக்கங்களில் தங்களுடைய மோசமான ஆட்சிக்கெதிராகவும் அடக்குமுறைக் கெதிராகவும் வெளிப்படும் கோபத்தை உணர்ந்து கொண்டு வெகுஜன போராட்டங்களையும் எதிர்ப்புக் குரலையும் ஒடுக்க குண்டர் பலம், நிர்வாக பலம் ஆகிய இரண்டையும் பயன்படுத்துகிறார்கள். ஜனநாயக கேலிக்கூத்தின் தவிர்க்கமுடியாத விளைவாக குற்றமும் சட்டத்தை வளைப்பதும் உச்சத்திற்கு சென்றுள்ளது.

தங்களுடைய புலம்பலையும் வேதனையையும் கிரிமினல்தனமாக அலட்சியம் செய்யும் அரசாங்கத் தையும் நிர்வாகத்தையும் காணும் துன்பப்படும் மக்கள் நீதியை எதிர்பார்த்து அவ்வப்போது நீதித் துறையின் கதவுகளை தட்டுகின்றனர். ஆனால் அதற்கான வழியென்பது மற்றபிற விஷயங் களுடன் நீதிபதிகள் பற்றாக்குறை, உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் காரணமாக கடுமையாக அடைக்கப்பட்டுவிட்டதென்பது நிரூபணமாகியுள்ளது. மேலும், பிற்போக்கு முதலாளித்துவ அரசு இயந்திரத்தின் பிரிக்கமுடியாத பகுதியாக நீதித்துறையும்கூட நெறிபிறழ்தல் மற்றும் முறைகேடுகளிலிருந்து விடுபட்டிருக்கவில்லை.

“நீதித்துறையில் ஊழல் இல்லை என்றெல்லாம் சொல்லமுடியாது. ஊழலுடன் நிச்சயம் சமரசம் செய்திட முடியாது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்” என்று உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு சற்றுமுன் அளித்த பேட்டியில் ஜஸ்டிஸ் ஆர் எம் லோதா அவர்கள் மிகத் தெளிவாக குறிப்பிட்டார் (livelaw.in 22.04.14) உள்ளூர் புலனாய்வு அதிகாரி முதற்கொண்டு சட்டத்தை அமுலாக்கும் ஏஜென்ஸிக்களின் ஊழல் மற்றும் திறமையின் மையின் காரணமாக குற்றம் நிரூபிக்கப்படுவதன் எண்ணிக்கை அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது எனவும் ஜஸ்டிஸ் லோதா கூறினார். குற்றம் நிரூபிக்கப்படுவதன் எண்ணிக்கை 1972ல் 62.5 சதவீதத்திலிருந்து 2012ல் 32 சதவீதமாக எவ்வாறு கடும் வீழ்ச்சியடைந்தது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். “வழிப்பறிக் கொள்ளையை திருட்டு எனவும், பாலியல் பலாத்காரத்தை மானபங்கம் எனவும், கடத்தலை, திருட்டுத்தனமாக ஓடுதல் எனவும் குற்றச்சாட்டு பதிவுசெய்யப் படுகிறது. நேர்மாறாக, மானபங்கப்படுத்துதலை பலாத்காரம் எனவும், திருட்டை வழிப்பறிக் கொள்ளை எனவும், வீட்டைவிட்டு ஓடுதல் கடத்தல் எனவும் குற்றச்சாட்டு பதிவுசெய்யப் படுகிறது. இதன் விளைவு தண்டனையை நிலை நாட்டிடத் தேவையான சட்டபூர்வ ஆதாரங்கள் இருப்பதில்லை” என்று அவர் கூறினார்.

குற்ற வழக்குகளில் தாமதமாக நீதி வழங்கப் படுவதை ஒரு குறையாக கருதாமல் அதை ஒரு வாய்ப்பாக கருதும் வழக்குரைஞர்களையும் அவர் விமர்சித்தார் (The Hindu - 15.08.14) பழுதுபட்ட இவ்வமைப்பில் சாதாரண மக்கள் பலியாவது இவ்வாறுதான்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# வன்முறையையும் வக்கிரத்தையும் தூண்டுவதில் கேளிக்கை துறையின் பங்கு

1ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் மாவட்ட ஆட்சியரை சந்தித்து தனதுபுகார் மீது நடவடிக்கை எடுக்காத எஸ்பி, டிஎஸ்பி, மகுடஞ்சாவடி இன்ஸ்பெக்டர் ஆகியோரை இவ்வழக்கில் சேர்க்கவேண்டுமெனவும் அவர் கோரிக்கை வைத்துள்ளார். உடலை வாங்கமறுத்து சேலம் அரசு மருத்துவமனையில் போராட்டம் நடத்திய வினுப்ரியாவின் உறவினர்களிடம் "தான் மன்னிப்பு கேட்பதாகவும் அலட்சியம்செய்த போலீசார்மீது உரிய நடவடிக்கை எடுப்பதாகவும்" குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான எஸ்பி அமித்குமார் சிங் உறுதியளித்துள்ளார்.

சுவாதியின் சடலம் படம்பிடிக்கப்பட்டு பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் பரவியதைபடுத்து நீதிபதி கிருபாகரன் அவர்கள் சென்னை தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதினார். அதைத்தொடர்ந்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான டிவிஷன் பெஞ்ச் தானாக முன்வந்து பல்வேறு கேள்விகளை மத்திய, மாநில அரசாங்கங்களிடம் எழுப்பியுள்ளது. கேட்கப்பட்ட சில கேள்விகளில் நமக்கு உடன்பாடு இல்லையென்றாலும், கேட்பவர் நெஞ்சை பதறவைக்கும் ஒரு அம்சம் என்னவெனில் சுவாதியின் சடலம் கொலை நடந்த இடத்திலேயே கேட்பாரற்று அப்படியே கிடந்ததாகும். "சுவாதியின் சடலம் 2 மணிநேரத்துக்கும் மேலாக மூடப்படா மலேயே இருந்துள்ளது. அந்த நேரத்தில் உங்கள் காவல் அதிகாரிகள் எங்கே போனார்கள்? ஒருவர் இறந்தபிறகும்கூட அவரது கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் சுவாதியின் கண்ணியம் காக்கப்படவில்லை. அவரது சடலம் கண்காட்சியைப் போல 2 மணிநேரத்துக்கும் மேலாக வைக்கப்பட்டிருந்திருக்கிறது. சடலத்தை அப்புறப்படுத்துவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ள ஏன் அவ்வளவு நேரம் ஆனது? மேலும் இவ்வழக்கு விசாரணையில் ரயில்வே போலீ சாருக்கும் மாநில போலீசாருக்குமிடையில் ஒருங் கிணைந்த் செயல்பாடு இல்லை என்ற பத்திரிகை செய்தியை சுட்டிக்காட்டிய நீதிபதி, .... காவல் துறையினரின் தாமதம் காரணமாக 90 சதவீத வழக்குகள் ரத்து செய்யப்படுகின்றன. அதுபோன்ற தாமதத்துக்கு என்ன காரணம்? அதை சரிசெய்ய உங்களிடம் எந்த வழிமுறைகளும் இல்லை" ('தி இந்து' ஜூன் 28) என அரசு வழக்கறிஞரிடம் கூறியுள்ளார்.

"கண்காணிப்பு கேமரா இல்லாததைப் பலரும் கேள்விக்குள்ளாக்கி இருந்தாலும், கேமராக்கள் குற்றவாளிகளின் அடையாளத்தை அறிய உதவுமே யன்றி குற்றங்களைத் தடுக்க அவைகளால் முடியாது. காவல் துறையின் கட்டுக்கோப்பும் உயிர்த்துடிப்பு மிக்க கறாரான செயல்பாடுகள், குற்றங்களைத் தடுக்க முன்கூட்டித் திட்டமிடும் கண்காணிப்பு வியூகம், ஒவ்வொரு வழக்கிலும் குற்றவாளிகள் நீதியின்முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கான தண்டனையை உறுதிசெய்வது இவையனைத்தும் சேர்ந்து மனித மனதில் உருவாக்கும் பயம் ஆகியவை தான் குற்றங்களைத் தடுக்க உதவும். மேலும் பல சந்தர்ப்பங்களில் சாமானியர்கள் காவல் நிலையங் களில் வழக்குப் பதியவே போராட வேண்டிய சூழல் இருக்கும்போது, குற்றவாளிகளிடத்தில் பயம் எங்கிருந்து உருவாகும்?" என 'தி இந்து' (ஜூன் 29, 2016) இதழ் கேட்கிறது. அதேபோல "வினுப்ரியாவின் விவகாரத்தில் காவல்துறை உடனடியாகச் செயல்பட்டு, ஆபாசமாகச் சித்தரிக்கப்பட்ட முகநூல் பக்கத்தை முடக்கியிருந்தால் வினுப்ரியா தற்கொலை செய்துகொண்டிருக்க மாட்டார். இந்த மரணத்துக்குக் காவல்துறையின் மெத்தனமே காரணம்... அவருடைய தந்தை கெஞ்சிக் கூத்தாடியபோதும் முகநூல் பதிவுகளை முடக்க முற்படாத சைபர் கிரைம், வினுப்ரியா இறந்த 10 நிமிடத்தில் முகநூல் பக்கத்தை முடக்கியும், சம்மந்தப் பட்ட குற்றவாளியை மூன்றாம் நாளே கைதும் செய்கிறது. வினுப்ரியா பிரச்சினையில் காவல்துறை காட்டிய அலட்சியம் ஒவ்வொரு காவல் நிலையத் திலும் பொதுமக்கள் எதிர்கொள்கிற அவலம். காவல்துறை அலட்சியம் காட்டாதிருந்தால் இது போன்ற மரணங்களைத் தடுக்கமுடியும்" என 'தினமணி' (ஜூன் 29, 2016) எழுதியிருக்கிறது. "இதை முன்னமே செய்திருந்தால் எங்கள் மகள் உயிரைக் காப்பாற்றியிருக்கமுடியுமே" என வினுப்ரியாவின் பெற்றோர் கண்ணீர்மல்கக் கதறுகின்றனர். காவல்துறையினரின் அலட்சியம் இன்னும் எத்தனை உயிர்களைப் பலிவாங்கப் போகிறதோ!

டெல்லியில் நடைபெற்ற நிர்பயா பாலியல் படுகொலைக்குபின் நாடுமுழுவதும் எழுந்த போராட்டத்தின் விளைவாக அமைக்கப்பட்ட வர்மா கமிஷன் பெண்கள் மீது தொடுக்கப்படும் வன் முறையைத் தடுப்பதுகுறித்தும் குறிப்பாக நீதித்துறை யிலும் காவல்துறையிலும் மேற்கொள்ளவேண்டிய சீர்த்திருத்தங்கள் குறித்தும் அளித்த முக்கிய பரிந்துரைகள் எதையும் எந்த அரசாங்கமும் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

கண்ணெதிரில் நடக்கும் தவறுகளைத் தட்டிக் கேட்கும் தைரியத்தை இளைய தலைமுறைக்கு கற்றுத்தர வேண்டும் என சிபிஐ (CBI) முன்னாள் இயக்குனர் திரு ராகவன் கூறுகிறார். பள்ளி, கல்லூரிகளில் ஒழுக்கத்தை கற்றுத்தரும் கல்வியை, பெண்களுக்கு மதிப்பளிக்கும் கல்வியை ஏன் துவக்கக் கூடாது எனவும் உயர்நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

### இன்னமும் நிலவும் பிற்போக்கு சிந்தனைகள்

நம்முடையது ஒரு ஜனநாயக நாடு என்று கூறப்படு கிறது. ஆனால், ஜனநாயகக் கோட்பாடுகளில் மிக முக்கியமான அம்சம் மதசார்பின்மையும் ஆணுக்கு நிகராக பெண்ணைப் பாவித்தலுமாகும். முன்பிருந்த நிலப்பிரபுத்துவ சமுதாயம் இவ்விரண்டிற்கும் நேரெதிரானது. நிலப்பிரபுத்துவம் தனது கொடுங் கோல் சர்வாதிகார ஆட்சி (மன்னராட்சி)யை நிலை நிறுத்த மதம் முக்கிய கருவியாக இருந்தது. பெண் என்பவள் ஆணின் கருத்தை ஒருபோதும் மீற முடியாது. ஆணுக்கு பெண் அடிமை என்ற நிலப் பிரபுத்துவ, மத போதனைகளை எதிர்த்துத்தான் ஜனநாயகக் கோட்பாடுகள் தோன்றின. அத்தகைய உயர்ந்த ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு அப்போது புதிதாய் தோன்றிய முதலாளித்துவம் தனது ஆதரவை அளித்தது. எனவே எந்தவொரு ஜனநாயக சமூகத் திலும் அந்நிலப்பிரபுத்துவ முன்னபிப்பிராயங்களும் பாரபட்சமும் நீடிக்க நியாயமில்லை என தோன்ற லாம். ஆனால், நமது நாட்டை பொறுத்தவரை மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளைப் போலல்லாமல் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் கீழ்தான் இந்திய முதலாளித்துவம் வளரத்துவங்கியது. அவ்வாறு இந்திய முதலாளித்துவம் வளரும்போது உலகளவில் முதலாளித்துவம் வளர்ந்து, முற்றி, ஏகாதிபத்திய தன்மையடைந்து, தனது முற்போக்கு குணாம்சங்க ளனைத்தையும் இழந்து, பிற்போக்காகி, சமூக முன்னேற்றத்திற்கு தடையாக நின்றது. உலகளவில் முதலாளித்துவம் தன் முற்போக்கு குணாம்சத்தை இழந்துவிட்ட கட்டத்தில்தான் இந்திய முதலாளித்துவம் தனது ஆட்சியை நிறுவியது. அதாவது பிரிட்டிஷ் முதலாளிகளிடமிருந்து இந்திய முதலாளிகள் ஆட்சி யதிகாரத்தை 1947ல் கைப்பற்றினர். ஆனால், கலாச்சாரத் துறையில் பழைய நிலப்பிரபுத்துவ கோட்பாடுகள், சிந்தனைகள், பழக்கவழக்கங்களை எதிர்த்து முழுமையாக போராடி அவை களையப்பட வில்லை. இப்பின்னணியில்தான் நாம் நமது கல்வி முறை, சமூக நடவடிக்கைகள், கலை—இலக்கியத்துறை ஆகியவற்றை சீர்தூக்கி பார்க்கவேண்டும்.

### கல்விமுறை

ஒரு ஜனக்கூட்டம் சமூகமாக, சுமூகமாக வாழ்வதில் கல்வியின் பங்கு தவிர்க்க முடியாத தாகும். நமது விடுதலை இயக்கத்தின் போது பிரதானமாக வலியுறுத்தப்பட்ட ஜனநாயக, மதசார் பற்ற, விஞ்ஞானபூர்வ கல்வி மற்றும் கல்வியளிக்கும் முழுபொறுப்பையும் அரசே ஏற்றுக்கொள்ளுதல் என்ற உன்னத நோக்கத்தை நமது கல்விக் கொள்கைகள் யாவும் நிறைவேற்றவில்லை. குறிப்பாகப் புதிய தேசிய கல்விக் கொள்கை – 1986ஆனது வேலைநோக்கக் கல்வி, தொழிற் கல்வி போன்ற கல்விமுறையை வெளிப்படை யாகவே வலியுறுத்தியது. அதனைப் பின்பற்றியே கடந்த 30 ஆண்டுகளாக அனைத்துக் கல்வித் திட்டங்களும் அனைத்து அரசாங்கங்களாலும் போடப்பட்டன. சிங்கத்தைப் போன்ற தைரியத்தையும் மிருதுவான குணநலன்களையும் அளிக்காத கல்வி, அதைக் கல்வியென அழைக்கத் தகுமா? எனக் கேட்கிறார் சுவாமி விவேகானந்தர். மனிதப் பண்பு களை, மனிதனை மனிதனாக உருவாக்குவதே கல்வியின் நோக்கம் என்ற கருத்து அலட்சியம் செய்யப்பட்டு, அதிகபணம் ஈட்டுவது மட்டுமே கல்வியின் நோக்கம் என்ற கருத்து நிலைநாட்டப் படுகிறது. இப்படியாக கல்வி தனியார்மயம், வியாபார மயம் ஆக்கப்பட்ட சூழலில் நீதி போதனை, ஒழுக்க நெறியைக் கற்பித்தல், பெண்களை மதித்தல் போன்ற பாடத்திட்டங்களுக்கெல்லாம் கல்வி நிலையங்களில் இடமில்லை. லாபத்தை மட்டுமே கருதி செயல்படும் கல்விநிறுவனங்கள் இத்தகைய கல்வியை போதித்து தன் கல்வி வியாபாரத்திற்கெதிரான சூழல் உருவாக எந்த கல்வி வியாபாரியும் விரும்பமாட்டார். இன்றைய தனியார்மயம் வியாபாரமயமாக்கப்பட்ட கல்விச் சூழலில் ஒழுக்கத்தையும் விழுமியங்களையும் சமூக உணர்வையும் உள்ளடக்கிய கல்விமுறையைக் கொண்டுவர அரசாங்கத்தை வலியுறுத்த மிகப்பெரிய மக்கள் இயக்கமின்றி எவ்வாறு இயலும்?

### கேளிக்கை துறை

மற்றொருபுறம் சினிமா, தொலைக்காட்சி, இண்டர்நெட் முதலியவற்றில் ஆபாசம் தங்கு தடையின்றி தலைவிரித்தாடுகிறது. ஆபாச வெப் சைட்டுகளை எளிதில் தடைசெய்ய முடியுமென் றாலும் அதற்கான நடவடிக்கைகளை அரசும் சம்மந்தப்பட்ட துறைகளும் எடுப்பதில்லை. பெண்களை அவமதிக்கும் தொலைக்காட்சி தொடர்களுக்கும் ஆபாச விளம்பரங்களுக்கும் தங்குதடையேயில்லை. சினிமாக்களில் கேவலமான வக்கிரத்தைப் பரப்பும், பெண்களை கீழ்த்தரமாக சித்தரிக்கும் கதைகளுக்கும் கொடூர வன்முறைக் காட்சிகளுக்கும் பஞ்சமேயில்லை. சினிமாவில் இடம்பெறும் பயங்கர வன்முறைக் காட்சிகள் அதற்குரிய பாதிப்பை செலுத்தத்தான் செய்கின்றன. அரிவாளை எடுத்து வில்லனும் அவனது அடியாட் களும் வீசுவீசுசென்று வீசுவர். மக்கள் நாற்புறமும் தெரித்து ஓடுவர். 'கண்ணெதிரே நடக்கும் தவறு களை தட்டிக்கேட்கும் தைரியத்தை இளைய தலை முறையினருக்கு கற்றுக் கொடுப்பதற்கு' பதிலாக வன்முறை கும்பலுக்கெதிராக மக்கள் அணிதிரள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதற்கு பதிலாக பீதியையும் அச்சத்தையுமே சினிமாக்கள் ஊட்டுகின்றன.

மேலும் இன்றைய சினிமாவின் கதையம்சங்களைப் பாருங்கள்! ஒரு இளைஞனை ஒரு இளம்பெண் காதலித்தே தீரவேண்டும்; ஒருவன் அவள் மேலுள்ள தன் காதலை தெரிவித்துவிட்டால் அவ்வளவுதான், மறுப்பதற்கே இடமில்லை. அவளும் அவனை காதலித்தே தீரவேண்டும். 'நீ அவளிடம் உன் காதலை சொன்னவுடன் அவள் மறுப்பாள். ஆனால் நீ விடக் கூடாது, அவளை துரத்திக்கொண்டே போனால் இறுதியில் அவள் வீழ்ந்துவிடுவாள். உன் காதல் முயற்சி வெற்றி! இதுதான் இன்றைய சினிமாக்களின் போதனை. இதுதான் காதலைப்பற்றிய இன்றைய சினிமாக்களின் மையக்கரு. உயர்ந்த விஷயங்களின் பால் இருவருக்குமுள்ள ரசனை, ஒத்தகருத்து ஆகியவற்றினடிப்படையில் எழுகிற பரஸ்பர மரியாதையே காதலாக பரிணமிக்குமென்பதை போதிக்கும் சினிமாக்கள் அரிதிலும் அரிது. ஆணுக்கு பெண் கட்டுப்பட்டவள் என்கிற பிற்போக்கு கருத்துக் கள் கொண்ட சினிமாக்கள் ஆட்சியாளர்களால் ஊக்குவிக்கப்படுகின்றன. இதைவிட கொடுமை என்னவென்றால், 'ஆம், ஆணுக்கு பெண் கட்டுப்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# அநீதிகளை தட்டிக்கேட்க மக்கள் முன்வரவேண்டும்

3ம் பக்கத் தொடர்ச்சி

பட்டவள்தான்’, ‘நம்முடைய மத தர்மத்தைமீறி பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வந்தால் இப்படித்தான் நடக்கும், இவ்வாறு நடைபெறுவதற்கு அப்பெண்ணே காரணம்’ என்றெல்லாம் மதவாதிகள்–அடிப்படைவாதிகள் கொடூரமான கருத்துக்களை அடிக்கடி வெளியிடுகிறார்கள். பெண்கள் மீதான வன்முறைக்கு இந்த ஆணாதிக்க மனோபாவமே முக்கிய காரணமாகும். ஆணாதிக்கம் என்பது நிலப்பிரபுத்துவத்தின் அம்சமே என்றாலும் நாம் முன்பே கூறியதுபோல் பிற்போக்கு முதலாளித்துவம் தனது பாதுகாப்பிற்காக நிலப்பிரபுத்துவ கலாச்சார அம்சங்கள் அனைத்தையும் பரப்புகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

மேலும் இன்றைய சினிமாக்களில் ‘மனித வாழ்வில் பாலுறவு மட்டுமே பிரதானம், பாலுறவு மட்டுமே மனித வாழ்வின் மையம்’ என்ற கருத்துக்கள் சிறிதும் கூச்சமின்றி போதிக்கப்படுகின்றன. தான் குறிவைக்கும் இளம்பெண்ணை எப்படியேனும் தன் காதல்வலையில் வீழ்த்துவதே ஒரு ஆண் மகனுக்கு அழகு. எந்தப் பெண்ணும் தன்னை ஏறெடுத்துப் பார்க்கவில்லையெனில் தானொரு ஆணாக இருப்பதில் அர்த்தமேயில்லை, இவ்வுலகத்தில் வாழ்வதே வீண் என்பது போன்ற கருத்துக்கள் அப்படத்தைப் பார்க்கும் ஓர் இளைஞன் மனதில் ஆழப்பதியும்படி காட்சி அமைப்புக்கள் அமைக்கப்படுகின்றன.

கற்பனை உலகத்தில் நடமாடும் திரைப்பட கதாநாயகர்களை சினிமாக்களும் ஊடகங்களும் பிரம்மாண்டமாக இளைஞர்கள்முன் நிறுத்துவதானது, விடுதலைப் போராட்டத்தில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்த குதிராம் போஸ் பகத்சிங், போன்ற வரலாற்று நாயகர்களை தங்கள் முன்மாதிரியாக கொள்ளக்கூடிய மனநிலை உருவாவதில் பெரும் இடையூறை ஏற்படுத்துகிறது. அல்லது அப்படிப்பட்ட உயர்ந்த மனிதர்களைத் தங்கள் முன்மாதிரியாக கொள்ளவேண்டுமென மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இன்றைய கல்வி முறையாவது போதிக்கிறதா? ஆக, குதிராம், சுப்பிரமணிய பாரதி, பகத்சிங், நேதாஜி, போன்ற மாமனிதர்களின் வாழ்க்கை போராட்டத்திலிருந்து உன்னத படிப்பினைகளை கற்றுணர்ந்து கொள்ளும் வாய்ப்புள்ள சமூக சூழ்நிலையில் மட்டுமே ஒருவருக்கு அநீதியை தட்டிக்கேட்கும் தைரியமும் உணர்வும் வரும்.

### முதலாளித்துவம் பரப்பும் நுகர்வுக் கலாச்சாரம்

பல்வேறு நுகர்வு பொருட்களை உற்பத்திசெய்யும் நிறுவனங்கள் எப்படியேனும் தங்களுடைய வியாபாரத்தை அதிகரித்து அதீத லாபத்தை பெற வேண்டும் என்பதற்காக பிரம்மாண்டமான விளம்பரங்களை செய்கின்றன. பிறர் கவனத்தை ஈர்க்கக் கூடிய விதவிதமான ஆடையணிவது, புதுப்புது மாடல் பைக்கில் வலம்வருவது, புதுப்புது மாடல் செல்போன்களை உபயோகிப்பது போன்ற அப்பட்டமான சுயநலமும் தன்னகந்தையையும் வெளிப்படுத்தும் நுகர்வு கலாச்சாரம் பரப்பப்படுகிறது. இவ்வாறாக இந்நிறுவனங்கள் ஊட்டி வளர்க்கும் நுகர்வு கலாச்சாரத்திற்கு நல்ல இளைஞன் என்றுசொல்லக்கூடிய இளைஞனும் கூட பலியாகிவிடுகிறான். இதன்விளைவாக பல்வேறு பொருளாதார மற்றும் கலாச்சார சிக்கல்கலுக்கு உள்ளாகிறான். தேவையோ தேவையில்லையோ மார்க்கெட்டில் பிரபலமாக இருக்கக் கூடிய அனைத்து எலக்ட்ரானிக், பிளாஸ்டிக், ஸ்டீல், மர சாமான்களை வாங்கி வீட்டில் குவித்துவைக்கவேண்டும், அப்போதுதான் பெருமை என்ற போலியான கௌரவத்திற்கு மக்களை, குறிப்பாக இளம் ஆண் மற்றும் பெண்களை நுகர்வுக் கலாச்சாரத்தின் அடிமைகளாக முதலாளித்துவம் இன்று ஆக்குகிறது. நுகர்வு கலாச்சாரத்திற்கு ஒருவரை பலியாக்க வேண்டுமானால் முதலில் அவரை உயர்ந்த விஷயங்களில் நாட்டங்கொள்ளாத, சமூக அக்கறையற்ற ஒருமுழு சுயநலவாதியாக, மாற்றவேண்டும். அதைத்தான் இன்றைய சினிமாக்களும் தொலைக்காட்சி தொடர்களும் ஊடகங்களும் செய்கின்றன. இவ்வித கலாச்சாரத்திற்கு இளம்பெண்களும் பலியாவது வேதனைக்குரியதே. நிலைமை இவ்வாறு இருக்கையில் பொதுநலனுக்கு தன் பங்களிப்பைச் செலுத்தும் எண்ணமோ அநீதியை தட்டிக்கேட்கும் மனமோ ஒருவருக்கு எவ்வாறு திடீரென்று வரும்?

### மதுபோதை

பெண்கள்மீது ஏவப்படும் பெரும்பாலான குற்றங்களுக்கு மதுவும் ஒரு காரணம் என காவல் துறையின் அறிக்கையே கூறுகிறது. ஆனால் அரசாங்கமே மதுபான வியாபாரத்தை ஜோராக நடத்திக் கொண்டிருக்கிறது. குடிமக்களின் (Citizen) குறிப்பாக இளைஞர்களின் ஒழுக்கம், கலாச்சாரத்தை அரசாங்கம் காசுவாங்கிக் கொண்டு அழிக்கிறது. மதுபானத்தால் ஏற்படும் மரணத்தால் விதவைகள் பெருகுகின்றனர், சமூகத்தில் ஓப்பீட்டளவில் முன்பு நிலவிய ஒழுக்கமும், கலாச்சாரமும் குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது. எண்ணிலடங்கா தீமைகளை கண்ணுற்று பொறுக்கமுடியாமல் மதுவை தடை செய்யக் கோரி கடந்த காலங்களில் தமிழகத்தில் தன்னிச்சையான மக்கள் போராட்டங்கள் எழுந்தன. காந்தியவாதி சசிபெருமாள் பல போராட்டங்களை தன்னந்தனியாக நடத்தினார். இறுதியில் போராட்டத்தின்போது அவருக்கு ஏற்பட்ட மரணம் மிகப் பெரும் அதிர்ச்சிஅலையை தமிழகத்தில் ஏற்படுத்தியது. மதுவிற்கு எதிராக ஏற்கெனவே இருந்து வந்த கோபம் மிகப்பெரிய வடிவத்தை எடுத்தது. இதுகுறித்து கருத்து தெரிவிக்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டவுடன் மதுவிலக்கை அமுல்படுத்த மாட்டோம் என பிடிவாதமாக அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் தமிழக அரசாங்கத்தின் கருத்தை சட்டசபையில் தெரிவித்தார். மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினால் ஏதோ அரசாங்க கஜானாவே காலியாகிவிடும் என்பதைப்போலெல்லாம் ஆளும் தரப்பிலிருந்து பல்வேறு கதைகள் கட்டிவிடப் பட்டது. அதனைத் தொடர்ந்து போராட்டங்கள் மேலும் பல்வேறு இடங்களுக்கு பரவியது. சென்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது மக்களை கவருவதற்காக, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மதுவிலக்கை அமுல்படுத்துவோம் என திமுக அறிவித்தது. உடனே ஆளும் அதிமுகவும் நாங்களும் மதுவிலக்கை படிப்படியாக அமுல்படுத்துவோம் என அறிவித்தது. தேர்தலில் வென்று ஆட்சியமைத்தவுடன் ஜெயலலிதா அவர்கள் 500 மதுக்கடைகளை மூட உத்தரவிட்டார். ஆனால் அந்த 500 கடைகளும் வியாபாரமே இல்லாத கடைகளாகும். அதுமட்டுமின்றி எங்கெல்லாம் மக்கள் எதிர்த்தனரோ அந்த குறிப்பிட்ட மதுக்கடைகள் மூடப்படவில்லை. பள்ளிகள், கோயில்கள், குடியிருப்புகளுக்கருகிலுள்ள கடைகளை மூடுவது குறித்து அரசு அக்கறை கொண்டதாகவே தெரியவில்லை. ஆக இந்த 500 கடைகளை மூட உத்தரவிட்டது வெறும் கண்துடைப்பே என்பது தெளிவாகிறது.

### அமைப்பு ரீதியாக தங்களை அணிதிரட்டிக் கொள்வதே பெண்கள், மாணவர்கள், இளைஞர்களின் பாதுகாப்பிற்கு ஓரேவழி

ஆபாசத்தையும் வன்முறையையும் தூண்டிவிடும் சினிமா, தொலைக்காட்சி, இண்டர்நெட் போன்றவையும் ஆணாதிக்க மனோபாவமும் நிறைந்து காணப்படும் நம் சமூகத்தில் நாம் ஒன்றுமே செய்ய முடியாது என்ற முடிவுக்கு வருவது தவறானது. பிறருக்கு உதவிசெய்யும் எண்ணமும் கண்ணெதிரே நடக்கும் தவறுகளை தட்டிக்கேட்கும் எண்ணமும் தைரியமும் எப்போதுமே மக்களுக்கு இருக்கிறது. சென்ற நவம்பரில் ஏற்பட்ட மழை–வெள்ளத்தின் போது எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்கள், குறிப்பாக இளைஞர்கள் ஓடோடிச்சென்று உதவினர் என்பதை பார்த்தோம். இப்படிப்பட்டவர்கள்கூட சில சமயங்களில் உதவிசெய்வதிலிருந்து ஒதுங்கி செல்கிறார்களே ஏன்? எங்காவது நடைபெறும் பிரச்சினைகளில் தலையிட்டு பாதிக்கப்படுபவருக்கு உதவி செய்பவர்களை மிகுந்த சிரமத்திற்கு, ஏன் அவரையே போலீஸார் குற்றவாளியாக ஆக்கிவிடுவார்கள் என்ற பயம் மக்கள் மனதில் பதிந்துள்ளது. தவறுகளை தட்டிக்கேட்பவருக்கு உரிய பாதுகாப்பை போலீஸார் வழங்குவர் என்கிற உணர்வு மக்களிடம் உருப்பெறும்போது பொதுஇடத்தில் நடைபெறும் வன்முறையானது பெருமளவு குறையும் என்பது உண்மை. ஆனால் அத்தகைய உத்திரவாதத்தை வழங்க காவல்துறையும் அரசும் ஒருபோதும் தயாரில்லை என்பதே கடந்தகால அனுபவம்.

இங்கே நாம் ஒன்றை சிந்தித்து பார்க்கவேண்டும். யாருக்கேனும் ஏதேனும் அநீதி நடந்தால் அதை தட்டிக்கேட்க அவருக்கு ஆதரவாக பலர் வருவர் என்கிறநிலை இருந்தால் வன்முறையில் ஈடுபடுவனுக்கு அவ்வளவு எளிதில் தைரியம் வந்துவிடுமா? எனவே மக்களனைவரும் அமைப்பாக தங்களை ஒன்றிணைத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறே இளம் பெண்களும் தங்களுக்கான பாதுகாப்பு கமிட்டிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வன்முறையை தடுக்கக்கோரி காவல் துறையையும் நீதித்துறையையும் அரசையும் நிர்ப்பந்திக்கும் இயக்கங்களையும் நடத்தவேண்டும்.

அரசியலே வேண்டாம், போராட்டமெல்லாம் வீண் என்ற கருத்தை உள்நோக்கங்கொண்ட சிலர் பரப்புகின்றனர். இங்கே நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அரசியல்தானே நம்மை ஆள்கிறது. விடுதலைக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்த சுப்பிரமணிய பாரதியும் பகத்சிங்கும் நேதாஜியும் செய்தது அரசியல் இல்லையா? வீட்டைவிட்டே பெண் வெளியே வரக்கூடாது என்ற நிலையிருந்த அந்த காலத்திலேயே இந்திய தேசிய ராணுவப்படையின் பெண் பிரிவில் 10,000 பெண்களை நேதாஜி திரட்டவில்லையா? அப்பிரிவிலிருந்த லஷ்மி ஷேகல் போன்றவர்களை நாம் இன்றும் போற்றவில்லையா? பாரதியும் வ உ சியும் நேதாஜியும் அரசியலில் ஈடுபட்டது தவறு, அவர்கள் செய்த தியாகங்களெல்லாம் வீண் என்று இன்று யாராவது சொல்லமுடியுமா? அவ்வாறு சொல்வதை சரி என்று யாரேனும் சொல்லமுடியுமா?

நாங்கள் சொல்கிறோம். எமது கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யை தோற்றுவித்தவரும் இக்கால கட்டத்தின் தலைசிறந்த மார்க்சிச சிந்தனையாளர்களுள் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் சொல்கிறார் “அவர்கள் செய்ததெல்லாம் சரி, அவர்களின் வாழ்க்கையிலிருந்து உரிய படிப்பினைகளை கற்றுக்கொள்ளாமல் இன்று எவரொருவரும் உயர்ந்த மனிதனாக ஆகவே முடியாது” என சொல்கிறார்.

அதேபோல மாணவ, மாணவிகளும் கல்வி நிலையங்கள் மற்றும் பிறஇடங்களில் மிகுந்த சித்திரவதைக்கு உள்ளாகிறார்கள். அச்சித்திரவதைகளை தாங்கிக் கொள்ளமுடியாமல் பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். அவ்வாறே அப்பாவி இளைஞர்கள் சிலரும் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். எனவே பெண்களும் மாணவர்களும் இளைஞர்களும் தங்களையும் தங்களைப் போலுள்ள பிறரையும் பாதுகாக்கும் ஓரேவழி அவர்கள் தங்கள் அமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதும் மேற்கண்ட சமூக சீரழிவுகளை எதிர்த்து ஜனநாயக இயக்கங்களை நடத்துவதும்தான். எனவே மக்களின் ஒன்றுபட்ட இயக்கங்களே தற்போதைய தேவை. எந்த தனி மனிதரின் உண்ணாவிரதம் அல்லது அதிதீவிர சாகச போராட்டம், ஏன் அரசியல் கட்சியாலோ கூட சமூக அநீதியை, பெண்கள் மீதான வன்முறையை தடுத்துநிறுத்தமுடியாது. மக்கள் குறிப்பாக இளம் ஆண்களும் பெண்களும் அமைப்புரீதியாக ஓரணியாய் திரளவேண்டும். ஜாதி, மத, இன, மொழி உணர்வுகளை தூண்டிவிட்டு மக்கள் ஒற்றுமையை பிரிக்கும் சக்திகளிடம் எச்சரிக்கையுடன் இருந்து போராட்ட கமிட்டிகளை அமைத்து போராட்ட இயக்கங்களில் பங்கேற்றால் மட்டுமே இதுபோன்ற சமூக அநீதிகளை, பெண்கள் மீதான வன்முறையை தடுத்துநிறுத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கமுடியும்.

# இன்று முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் மானுடத்தை எங்கே இட்டுச்செல்கின்றது?

விரல்களைப் போன்ற எண்ணற்ற பல பற்றுறுப்புக்கொடுக்கு (TENTACKLES) உறிஞ்சிகளைக் (suckers) கொண்ட ஹைட்ரா எனும் நீர்வாழ் சிற்றுயிர் விலங்கானது ஒருபோதும் தன் பற்றுறுப்புக் கொடுக்கு உறிஞ்சிகளை இழக்காது. அது துண்டிக்கப் பட்டவுடனேயே அல்லது உடைந்தவுடனேயே மீண்டும் வளர்ந்து விடும். மனித இனத்தின் கொடிய எதிரியான முதலாளித்துவமும் இதே மாதிரியைப் போன்றதாலதால் அதுவும் எண்ணற்ற பற்றுறுப்பு ஊறிஞ்சிகளைக் கொண்டுள்ளது. ஒன்றை நீங்கள் வெட்டியெறிந்தால் உடனடியாக அவ்விடத்தில் மற்றொன்று உருவாகும். ஆனால் இது புராணகால கட்டுக்கதை பயங்கரங்களை விஞ்சுமளவிற்கு உள்ளது. முதலாளித்துவம் மென்மேலும் வளர்ச்சியடைந்து வளர்ச்சியடைந்து அதன் சாகும் தருவாய்க்குச் செல்கையில், அது ரத்தத்தை உறிஞ்சியெடுக்கும் தனது துணிகர முயற்சியில் மென்மேலும் பல ரத்தத்தை உறிஞ்சும் கொடுக்குகளை தன்னுடன் சுமந்துகொண்டு செல்வதைக் காண முடிகின்றது. இதற்குப் பலியான மனித இனம், பாடுபடும் ஏழை மக்கள், சுரண்டப்படும் வெகுஜனம் என்ன செய்வ தென்று கண்டறிய முடியாமல், மெய்மறந்து திகைத்து நிற்கின்றது.

முதலாளித்துவமானது தனது சுரண்டலையும் அடக்குமுறையையும் நீட்டித்து வைத்திருக்க சமீப காலமாக அது கண்டறிந்த சில உபாயங்களை இங்கே காணலாம். அவர்கள் புதுப்புது வழிகளில் கொடூரமாக ஊடுருவி பல நாடுகளில் வியாபித்து அங்கெல்லாம் பேரழிவை ஏற்படுத்தி மக்களை மனங்குன்றவைத்திருக்கின்றனர்.

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரான தோழர் மாசேதுங் அவர்கள் உருவாக்கிய சீன மக்கள் குடியரசு அச்சமுதாயத்தை சோசலிச நிர்மாணத்தை நோக்கிய தனது வழியில் பயணித்துச்சென்றது. ஆனால், கடந்த நூற்றாண்டின் எழுபதுகளிலிருந்து அதன் முதலாளித்துவப் பாதையை தலைமையானது மீண்டுமொருமுறை பின்னுக்கிழுத்து முதலாளித் துவத்தின் பயங்கர படுபாதாளத்திற்குள் அந்நாட்டைத் தள்ளியிருக்கின்றது. அதன் விளைவானது அதி வேகமாக ஏற்பட்டுவரும் பாகுபாட்டின் இடை வெளி மற்றும் வேறுபாடுகள் பல்வேறு வழிகளில் சமுதாயத்தினுள் வெளிப்படுகின்றது.

சமீபத்தில் ஓர் வலைதள அமைப்பில் ஒரு செய்தி வெளியிடப்பட்டது. பெருநகர சீனாவை பிரதிநிதித்துவப்படுத்தும் சாங்காய் நகரத்திலிருந்து வந்த அழகிய பாதங்களுடைய வசதிபடைத்த ஓர் பெண்மணி தனது காதலனுடனான திடீரென உறவை முறித்துக்கொள்வதாக அதில் சித்தரிக்கப் பட்டிருந்தது. ஜியாங்சி மாகாணத்தின் நகர எல்லைக்கு வெகுதூரத்திற்கப்பாலுள்ள ஏழை கிராமத்திலுள்ள அவளது காதலனின் வீட்டுக்கு வந்து திரும்பியபின்னர் அவள் ஏமாற்றமடைந்தாள். இக்கதையானது பொய்யென பின்னர் அறியப்பட்டது. ஆனால், அதற்கு முன்னரே அது போன்ற உறவு முறிந்த பற்பல உண்மைச்சம்பவ உதாரணங்கள் வலைதளத்தில் பரவி விட்டன. இச்சம்பவமானது அத்தம்பதிகளுக்கிடையில் ஏற்பட்ட நகர–கிராம பின்னணியினடிப்படையிலான சமூக வேறுபாடுகள் பிரதானமாக செயல்பட்டுக்கொண்டிருப்பதையும் சமூகம் சுக்குநூறாக உடைந்திருப்பதையும் நிரூபித்துக்காட்டுகிறது.

இது வெறுமனே செல்வச்செழிப்பை விரும்பி நிற்கின்ற நகர்ப்புற நடுத்தர வர்க்க, குறிப்பாக அவர்களின் இளைய தலைமுறையினர் மற்றும் அவர்களது வாழ்க்கை முறையிலிருந்து மாறு பட்டுள்ள இன்றைய சீனாவின் கிராமப்புற மக்களின் முழுமோசமான வறுமை மற்றும் அதனையொட்டிய வாழ்க்கை முறை மட்டுமல்ல. மிகப்பெரும் வேறுபாடானது கலாச்சாரம் மற்றும் தத்துவார்த்த கேள்விகளில் வெளிப்பட்டது. இவைகள் நீண்டகாலப் போராட்டப்பயணத்தின் வாயிலாக மாவோ தலைமையின் கீழ் சீன மக்கள் குடியரசில் நிறுவப்பட்ட சமூகத்தின் அறநெறி யொழுக்க அடித்தளத்தை அரித்துக்கொண்டிருக் கின்றது. (ஆதாரம்: தி ஸ்டேட்ஸ்மேன், கொல்கத்தா எடிஷன், 14 மார்ச் 2016)

இருந்தபோதிலும் வலைதளத்தில் வந்த அக்கதையின் எதிர்வினையானது, முதலாளித்துவம் அவர்களிடமிருந்து எதனைப் பறித்துச் சென்று விட்டது என்பதை சீன மக்கள் படிப்படியாக உணர்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதையே காட்டுகிறது!

இரண்டாவது நிகழ்வானது, பயங்கரவாத அமைப்பாக கருதப்படும் ஐஎஸ்ஐஎஸ் சம்பந்தப் பட்டதாகும். இவ்வமைப்பின் கொடூரத்தை உலக மக்கள் கண்ணுற்ற பின்பு, பெரும் ஏகாதிபத்திய சக்திகளும்கூட அதன்மீது விஷத்தை உமிழ்கின்றனர். ஆனால், இதே சக்திகள் தங்களின் நயவஞ்சகத் திட்டத்தை நிறைவேற்றிடவே அவர்களது கூட்டாளிகளுடனும் கையாட்களுடனும் இணைந்து கொண்டு ராணுவப்பயிற்சியளித்து, ஆயுதங்கள் மற்றும் பிறவற்றினை அளித்து வெளிப்படை யாகவும் ஒளிவுமறைவாகவும் இந்த அமைப்பை ஏற்படுத்தி வளர்த்திட, பணியாற்றின. உதாரணமாக சிரியாவில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவர இதனைப் பயன்படுத்தின. மேலும் இப்போது இந்த ஐஎஸ்ஐஎஸ் அமைப்பானது என்னென்ன செய்துகொண்டிருக்கின்றது. இப்படித்தான் நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை மார்ச் 12 தேதியிட்ட தனது செய்தித்தாளில் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாட்டுச்சபையும் மனிதஉரிமை அமைப்புகளும் ஐஎஸ்யானது ஆயிரக்கணக்கான பெண்களை திட்டமிட்டுக் கடத்தி சிறைபிடித்து வைத்து கற்பழிக்கின்றதென அவ்வப்போது குற்றஞ்சாட்டுகின்றன. ஐஎஸ்யானது குறிப்பாக யாசிடி இன ஆண்கள் மற்றும் பெண்கள் மீது பழிவாங்கும் எண்ணத்துடன் பாய்ச்சலாயிருக் கின்றது என்றும் தெரிய வருகின்றது. கடந்த ஆண்டு வரையில் சுமார் 5000 யாசிடி இன ஆண்கள் மற்றும் பெண்கள் ஐஎஸ் அமைப்பால் சிறைபிடித்து வைக்கப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு உள்ளது. பின்னர், அவர்களில் கிட்டத்தட்ட 2000 பேர்கள் எப்படியோ தப்பித்துவிட்டனர். குறிப்பாக தப்பித்து வந்த யாசிடி இன பெண்கள், அவர்களிடம் பேட்டி கண்டபோது, தாங்களாகவே பறைசாற்றிக் கொள்ளும் இஸ்லாமிய அரசின் கீழ் இயங்கும் குர்திஸ்தான் முகாம்களில் தாங்கள் அனுபவித்த பயங்கர நிகழ்வை வெளியிட்டனர். ஐஎஸ்யானது சிறைபிடித்த யாசிடி பெண்களை அவர்களின் சக வீரர்களுக்கு பரிசாக அல்லது விற்குமளவிற்கு கூட சென்றனர் என ஏற்கனவே தெரிய வந்துள்ளது. இப்பொழுது இன்னும் ஒரு சோககர நிகழ்வானது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. மனித உரிமையையும் கௌரவத்தையும் முற்றிலும் நிராகரித்து, ஐஎஸ் அமைப்பபினர் பெண்களையும் 12 வயதிற்கும் கீழான பெண் குழந்தைகளையும்கூட பாலுறவு அடிமைகளாக பயன்படுத்தும் கடுமையான சுரண்டலுக்கு ஆட்படுத்தியிருக்கின்றனர்.

அவர்கள் தங்களின் குற்றங்களை மறைப்பது ஒருபுறமிருக்கட்டும். ஐஎஸ் அமைப்பானது சிறை பிடித்த பெண்களை அவர்களின் பாலுறவு அடிமைகளாக மாற்றிடும் வழக்கம் குறித்து பெருமைப்பட்டுக்கொள்கின்றது. அடிமைகளை நிர்வகிக்க அவர்கள் “போரில் கைப்பற்றப்பட்ட வைகளுக்கு” என தனித்துறையை ஏற்படுத்தியிருக் கின்றனர். அதற்கும் மேலாக பெண்கள் கருத்தரிக் காமலிருப்பதை உத்திரவாதப்படுத்தி, பாலின அடிமைகளை அப்படியே வைத்திருந்து ஐஎஸ்ஐஎஸ் ஸின் செயல்வீரர்களுக்கு வழங்கிட ஏதுவாக ஐஎஸ் ஐஎஸ்யானது வெளிப்புற மற்றும் ஊசி மூலமான உட்புற கருத்தடை சாதனங்களை பயன்படுத்தி வருகின்றனர். சில சமயங்களில் இரண்டினையும் பயன்படுத்துகின்றனர். (ஆதாரம்: தி ஸ்டேட்ஸ்மேன், கொல்கத்தா எடிஷன், 14, மார்ச் 2016)

முதலாளித்துவத்தின் குழந்தையென ஐஎஸ் அமைப்பு கருதப்படுமானால், இவ்வமைப்பின் மனித நன்மதிப்புகளும் மனிதாபிமானமும் இப்படித்தானிருக்கும். ஆனால், இந்த ஐஎஸ் அமைப்பானது அவர்களது உத்வேகத்தையும் செயல்முறையையும் எங்கிருந்து உருவாக்கிக் கொண்டது? ஐக்கிய நாட்டுச்சபையின் சமீபத்திய செயல் இவ்விஷயத்தினை விளக்கும்.

உலகத்தின் பாதுகாவலன் என தன்னைத் தானே நியமனம் செய்துகொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ரப்பர் ஸ்டாம்ப் ஊதுகுழலாக மென்மேலும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த ஐக்கிய நாட்டுச்சபை உள்நாட்டு பூசல்களால் சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கும் அல்லது அவர் களுக்குள் போரை நடத்திக்கொண்டிருக்கும் பல நாடுகளுக்கு அடிக்கடி அமைதிப்படையை அனுப்பி வைக்கின்றது. அனைத்தும் இல்லாவிட்டாலும், பல நிகழ்வுகள் ஏகாதிபத்திய திட்டத்தின் அப்பட்டமான வெளிப்பாடாகும். ஏகாதிபத்தியமானது ஒருமுறை வன்முறைத்தீயை மற்றும் போரினை தூண்டிவிட முடிந்தால், ஐக்கிய நாட்டுச்சபையானது அதனைத் தீர்த்துவைப்பதற்கு அமைதிப்படையை அனுப்பி வைக்கின்றது. உண்மையில் இந்த அமைதிப் படையானது பல முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளைச்சார்ந்த பலவகைப்பட்ட கூலிப்படை பட்டாளமேயாகும்.

ஐக்கிய நாட்டுக்கொடியின் கீழ் பணியாற்றும் போது அதன் படைவீரர்கள் பாலுறவு முறைகேட்டில் ஈடுபட்டார்களென்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதால் அமைதிப்பாதுகாப்புப்படை பிரிவு முழுவதும் வெளியேற்றப்படவேண்டுமென்ற தீர்மானத்தை இப்போது ஐக்கிய நாட்டுச்சபையின் பாதுகாப்பு கவுன்சிலானது நிறைவேற்றியுள்ளது. சமீபகால ஆண்டுகளில் பாலுறவு தொடர்புடைய முறைகேடு மற்றும் சுரண்டலில் அமைதிப்படையினர் ஈடுபடுவதான குற்றச்சாட்டு அதிக எண்ணிக் கையில் எழுந்துள்ளதாக ஐக்கிய நாட்டுச்சபையின் அறிக்கை கூறுவதால், இது தேவைப்பட்டிருக்கிறது. இது போன்ற பத்து அமைதிப்படை பயணத்தின் போது ஒரே ஆண்டில் இம்முறைகேடு 33% அதிகரித்திருக்கிறது. (2014 ஆம் ஆண்டில் 52 ஆக இருந்தது 2015ஆம் ஆண்டில் 69 ஆக அதிகரித் திருக்கிறது). (ஆதாரம்; டைம்ஸ் ஆஃப் இந்தியா, கொல்கத்தா, 13 மார்ச், 2016)

என்ன ஒரு முரண்பாடான கூற்று! சச்சரவுகள் ஏற்படுத்துவதற்கான களத்தை ஏகாதிபத்தியவாதிகள் தயார் செய்கின்றனர். அது ஓரளவு உயரத்திற்கு தயாரானவுடன் அவர்கள் அமைதிப்படையினரை அனுப்பிவைக்கின்றனர்! அமைதியை நிலை நாட்டிக்கொண்டே அவர்களது படைவீரர்கள் பாதிக்கப்பட்டவர்களிடம் முறைகேட்டில் ஈடுபட்டு ஆனந்தக்கூத்தாடுகின்றனர்! ஐக்கிய நாட்டுச் சபையின் பாதுகாப்பு கவுன்சிலானது கடுமையான நடவடிக்கை தேவையென பரிந்துரைக்கிறது! ஆனால் இந்த அப்பட்டமான உண்மையை இவ்வுலகம் பார்த்துக்கொண்டிருக்கின்றது! அமைதிப் படையினர் சித்திரவதைவாதிகளாக மாறிவிட்டனர். மேலும் சர்வதேச அமைதியின் பாதுகாவலன் என தங்களைத் தாங்களே நியமனம் செய்துகொண்டுள்ள இவர்களே கண்ணியம் மற்றும் மனிதாபிமானத்தின் அனைத்து நியதிகளையும் மீறி குற்றம் புரிகின்றனர்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# மனித மதிப்புகள், உறவுகள், உரிமைகளை சீரழிக்கும் முதலாளித்துவம்

5ம் பக்கத் தொடர்ச்சி

அதே நேரம் ஜஎஸ்ஜஎஸ்ஸும் குற்றம் புரிவதற்கான சமிக்கைகள் தரப்பட்டு அவர்கள் மேலும் முன்சென்று பலியாட்களாயிருப்பவர்களை அடிமைப்படுத்திடவும் பாலுறவு அடிமைகளாக்கிடவும் ஜாடை காட்டப்படுகிறது. முதலாளித்துவத்திற்காக வாதிடுபவர்கள் எங்ஙனம் இக்குற்றச்சாட்டுகளுக்கு எதிர்வாதம் தருவார்கள்?

ஒருகாலத்தில் சூர்யோயுதயமாகும் நாடென வருணிக்கப்பட்ட முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடு பற்றிய மற்றொரு நிகழ்வுக்கு நாம் இப்போது செல்வோம். இச்சொற்றொடர் அது உண்மையென எண்ணும்படி குறிப்பிடுமானால், அதற்கு மாறாக நாம் இங்கே குறிப்பிடும் நிகழ்வு இருள் படர்ந்த நம்பிக்கையற்ற ஒன்றாகத்தான் இருக்கின்றது. சமீபத்தில் ஜப்பான் நாட்டில் நிகழ்ந்த புகுஷிமா அணு உலை விபத்து உலக மக்கள் அறிந்ததே. பெரும் பேரழிவினை ஏற்படுத்தும் அணுசக்தியை பயன்படுத்துவதற்கெதிரான உலகம் முழுவதிலுமிருந்து எச்சரிக்கையை அது ஏற்படுத்தியது. அதற்கெதிரான மக்களின் கருத்தை எதிர்கொண்ட ஏகாதிபத்திய சக்திகளின் அரசாங்கங்கள் அணுசக்தித் திட்டங்களை முழுவதுமாக கைவிடப்போவதில்லை என்றாலும் மேற்கொண்டு அணுசக்தித்திட்டங்களை விரிவுபடுத்தப்போவதில்லை என்று பேசுமளவிற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர். இதற்கு ஜப்பானும் விதிவிலக்காக இருக்கவில்லை.

அத்தகைய பேச்சுக்கள் உலகத்தின் முன்பு ஒப்புக்குக் கூறப்பட்டதாகும். உண்மையில் கோர நிகழ்வுகள்தான் ஏற்பட்டிருக்கின்றன. அந்நிகழ்வுகள் வெறுமனே மனித உரிமைகள் ஒட்டு மொத்தமாக மீறப்பட்டதை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், மனித உயிர்களுக்கும், மனிதாபிமானத்திற்கும் மற்றும் மனித நன்மதிப்புகளுக்கும் குறைந்தபட்ச மரியாதைகூட தரப்படவில்லை என்பதைக் காட்டியது. செயல்படாத நிலையிலிருக்கும் புகுஷிமா அணு உலைக்கு வடக்குப் பகுதியிலிருக்கும் மினாமிசோமா எனும் புத்தர் கோவிலில் அடையாளம் காணப்படாத ஆறு தொழிலாளிகளின் சாம்பல்கள் கண்டறியப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 50 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்ட, சமுதாயத்தின் விளிம்பிலிருக்கும் பிரிவினரைச் சார்ந்த, ஒருபுறம் எவ்வித சிறப்புத்திறனுமற்ற அல்லது மற்றொருபுறம் நெருங்கிய குடும்ப தொடர்பும் அற்ற அவர்கள் கிட்டதட்ட 26,000 தொழிலாளர்களில் சிலராவர்.

அவர் எத்தகைய வேலையைச் செய்திட ஈடுபடுத்தப்பட்டனர்? கதிர்வீச்சினால் மாசுபடுத்தப்பட்ட பூமியின் தரையின் மேற்படர்ந்துள்ள மண்ணை அகற்றிடவும், கட்டிடத்தின் கூரைகளை துடைக்கவும், நீர்க் கால்வாய்களை சுத்தப்படுத்திடவும் மற்றும் மரங்களை வெட்டிடவும் ஓர் முடிவில்லாமல் நிரந்தரமாக அதில் ஈடுபடுமாறு வேலையில் அமர்த்தப் பட்டுள்ளனர். குடிமக்கள் குழுவிற்கு தலைவராயிருப்பவரும் முன்னாள் பகல்நேர வேலைத் தொழிலாளருமான மிச்சுவோ நகாமுரா கூறியிருப்பது போல், “புகுஷிமா– மாசினை அகற்றி சுத்தப்படுத்தும் மாபெரும் திட்டத்தினால் வளர்ச்சியடைந்த, செல்வாக்கு பெற்றவர்களால் அவர்கள் சுரண்டப்பட்டிருக்கின்றனர்”.

எப்படி? மற்றும் எந்த அளவிற்கு அவர்கள் சுரண்டப்படுகின்றனர்? அரசாங்கமானது யதார்த்தத்தில் இத்தகைய தொழிலாளர்களுக்கான எந்தப்பொறுப்பினையும் ஏற்காமலும், புகுஷிமா பேரழிவினால் பரந்துபட்ட பகுதிகளில் ஏற்பட்ட கதிர்வீச்சை சுத்தப்படுத்தும் கடமையை செய்யாமலும் விலகியிருக்கின்றது. மாறாக, இப்பொறுப்பினை மாசு அகற்றும் காண்டிராக்ட் திட்டம் ஒப்படைக்கப்பட்ட சில 300 நிறுவனங்களுக்கும், இவர்களின் கட்டுப்பாட்டிலிருக்கும் கார்ப்பொரேட் காண்ட்ராக்டர்களுக்கும் மற்றும் உப காண்ட்ராக்டர்களுக்கும் ஒப்படைத்திட தேர்வு செய்திருக்கின்றது. வெளிப்படையாகக் கூறினால் இத்தகைய நிறுவனங்களும் அவர்களது ஏஜெண்டுகளும் பெருந்தன்மையான செயல்களை செய்யவேயில்லை.

அவர்கள் தங்களுக்குரிய பலன்களை அறுவடை செய்ய ஏற்படுத்தப்பட்டவர்கள் ஆவார்கள். எனவேதான் அவர்கள் கடும் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிற இக்காலத்தில் வேறு வழியின்றி தங்களின் உயிரையும்கூட பணயம் வைத்து கதிர்வீச்சின் ஆபத்தினைக் கொண்ட பணியில் ஈடுபடத் தயாராயிருக்கும் சமுதாயத்தின் விளிம்பிலிருக்கும் தொழிலாளர் மத்தியிலிருந்து ‘மாசு அகற்றும்’ பட்டாளம் ஒன்றினை ஏற்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் மூன்றிலிருந்து ஆறு மாதகால ஒப்பந்தத்தில் சொற்ப அல்லது எப்பயனுமின்றி அடிமைகள் மற்றும் கொத்தடிமை தொழிலாளர்களைப் போல வேலை செய்திடுமாறு ஆக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தற்காலிக கூடாரங்களில் வசித்து வருகின்றனர். 2015ம் ஆண்டின் முதல் பாதியில் கிட்டத்தட்ட 25% நிறுவனங்கள் தொழிலாளர் சட்ட விதிமீறல் குற்றங்களை புரிந்துள்ளதென சுகாதார, தொழிலாளர் மற்றும் சமூகநல அமைச்சகமும்கூட கண்டறிந்துள்ளது. குறைவான ஊதியம் வழங்குதல், கூடுதல்நேர வேலை மற்றும் செய்யப்பட வேண்டிய சட்டப்படியான கதிர்வீச்சு சோதனைகளை செய்யாதிருப்பது ஆகியன அவற்றுள் அடங்கும்.

உண்மையில் அரசாங்கமானது தேசியப்பேரிடரால் ஏற்பட்ட கழிவுகளை நிலத்திலிருந்து சுத்தம் செய்யும் நிராதரவற்ற தொழிலாளர்களை தேசத்தின் கதாநாயகர்கள் என நாட்டின் முன் காட்டியிருக்க வேண்டும். ஆனால் யதார்த்தம் அதற்கு மாறாக உள்ளது. வறுமையின் மற்றும் ஒழுக்கக்கேட்டின் எல்லைக்குத் தள்ளப்பட்டு, கடினமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு, அவர்களது உயிருக்கும் வாழ்க்கைக்கும் எவ்வித பாதுகாப்புமில்லாத நிலைமையில் அவர்கள் அடிக்கடி கொடிய குற்றங்களைப் புரியும் முயற்சியில் ஈடுபட தள்ளப்படுகின்றனர். இதனால் அக்கம் பக்கத்திலிருப்பவர்களாலும்கூட அவர்கள் வேரற்ற அநாதைகளாக பார்க்கப்பட்டு தனிமைப்பட்டு நிற்கின்றனர்.

மீண்டும் என்ன ஒரு முரண்பாடு! ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது அரசாங்கங்களும் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும், அவர்களையும் அவர்களது சுற்றுப்புற சூழலையும் மாசுபடுத்தக்கூடிய கொள்கைகளை கடைபிடிக்கின்றனர். பிறகு அந்த மாசினை அகற்றும் திட்டங்களைத் துவங்கி அதில் லாபமீட்டும் புதிய வழிகளையும் ஏற்படுத்துகின்றனர். சுத்தப்படுத்தும் செயல்பாட்டிற்காக நம்பிக்கையற்றிருக்கின்ற நிராதரவற்ற தொழிலாளர்களை அதில் ஈடுபடுத்தி மிகவும் தாங்கவொணா சுகாதாரமற்ற வாழ்க்கைக்கு அவர்களை தள்ளிவிடுகின்றனர். (ஆதாரம் : தி ஸ்டேட்ஸ்மேன், கொல்கத்தா எடிஷன்., 14.03.2016)

இவற்றையெல்லாம் செய்துகொண்டு முதலாளித்துவ–ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களது அரசியல் நிர்வாகிகளும் அவர்களது ஏஜெண்டுகளும் மானுடத்தை எங்கு வழிநடத்திச் செல்கின்றனர்?

# நீதிமன்ற செயல்முறையை நீர்த்துப்போகச் செய்வதும் . . .

2ம் பக்கத் தொடர்ச்சி

தற்போது கேள்வி என்னவென்றால் தவறுதலாக இவையெல்லாம் நடைபெறுகிறதா அல்லது திட்டமிட்டே நடைபெறுகிறதா என்பதுதான். முதலாளித்துவத்தின் உதயத்தின்போது சட்டமியற்றும் சபை, நிர்வாகம், நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளின் பொறுப்புகளையும் வரையறுக்க “அதிகாரத்தை பிரித்தல்” எனும் கோட்பாட்டை பூர்ஷ்வா ஜனநாயகத்தின் நிபுணர்கள் கொண்டுவந்தனர். ஒரு பிரிவின் அதிகார வரம்பிற்குள் மற்றொரு பிரிவு தலையிடுதல் அல்லது ஆக்கிரமித்தலை முன்கூட்டி தடுத்தனர். ஏதேனுமொரு பிரிவிற்குள் அதிகாரம் குவிக்கப்படுவதை தடுக்க பல்வேறு கட்டுப்பாட்டு முறைகள் புகுத்தப்படுகின்றன. ஆனால் இந்த முதலாளித்துவ அமைப்பு முடமாகி, பிற்போக்கானதன் காரணமாக, தங்களுடைய ஒடுக்குமுறை, ஊழல் ஆட்சியின் வாழ்நாளை நீட்டிக்கச்செய்ய ஆளும் ஏகபோகங்கள் இக்கோட்பாட்டை சீர்குலைத்துவருகிறார்கள். எனவே, ஆளும் பூர்ஷ்வா வர்க்க நலனை முன்னிட்டு ஒரு பிரிவின் அதிகார எல்லைக்குள் மற்ற பிரிவு அவ்வப்போது தலையிடத்தான் செய்கிறது. ஜனநாயகத்தின் இந்த அடிப்படைக் கோட்பாடுகளை சீர்குலைப்பதின் ஒருபகுதியாக தங்களுடைய அரசாங்கத்தின் ஒரு துணைஉறுப்பாக நீதித்துறையை மாற்ற அதன்மீது தங்களுடைய முழுக் கட்டுப்பாட்டை நிறுவ ஆளும் பூர்ஷ்வா வர்க்கம் முயற்சித்துவருகிறது.

மறுபுறம், தொழில் குழுமங்களுக்கும் வணிகத் திமிங்கலங்களுக்கும் வரிச் சலுகை, தள்ளுபடிகளை வாரிவழங்கியும் ஊழல் மூலமும் அதிகார துஷ்பிரயோகம் செய்தும் தங்கள் செல்வத்தை பன்மடங்கு பெருக்கிக்கொண்டுள்ள சட்டமன்ற–பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் சலுகைகளை நியாயமற்ற முறையில் உயர்த்திவரும் நிலையிலும் மக்கள் நலத்திட்டங்களுக்கு பட்ஜெட் ஒதுக்கீடுகளை மிகப்பெரிய அளவில் குறைத்து வருவதைப்போல நிதிப் பற்றாக்குறையால் நீதித்துறையும் முடக்கப்பட்டுள்ளது. மறுபுறம், போதுமான நிதி ஆதரவின்மையால் முறையான நீதி பரிபாலனம் பாதிக்கப்பட்டுள்ளது. இறுதியாக, இதற்கான விலையை கொடுப்பவர்கள் மக்களே, பழைய பழமொழி ஒன்று கூறுவதுபோல ‘தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்’.

ஆனால் இதுவே முற்றும் முடிவுமானதா? இல்லை. தீர்வுக்கான வழிமுறை இருக்கிறது. அந்த வழி கெஞ்சுவதோ அடிபணிந்து போவதோ அல்ல. பிற்போக்கு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தையும் அதன் சேவகர்களையும் அதன்மூலம் அசைக்க முடியாது. சரியான பாதையில், சரியான தலைமையின் கீழ் சக்திவாய்ந்த அணிதிரட்டப்பட்ட நீடித்த போராட்ட அலையை கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் மக்கள் சக்தியின் விழிப்புணர்வுகொண்ட எழுச்சியும் அச்சக்தியின் அழுத்தத்தை ஆட்சியாளர்களின் மீது செலுத்துவதும்தான் உத்தரவாதமுள்ளதாகும்.

இத்தகைய போராட்டமேடைமீது நின்று போதுமான எண்ணிக்கையில் தகுதிவாய்ந்த நீதிபதிகளை உடனடியாக நிறுவு, நீதித்துறையின் முறையான செயற்பாட்டிற்குரிய கட்டமைப்பை நிறுவு, விரிவுபடுத்து, உகந்த காலத்திற்குள் வழக்குகளை முடித்துவை, விசாரணையே இன்றி, அதுவும் காலவரையேயின்றி சிறையிலடைக்கும் தற்போதைய வழக்கத்தை நீக்கு என்கின்ற முழக்கங்கள் எழுப்பப்படவேண்டும்.

# மதுரையில் ஏஐடிஎஸ்ஓ நடத்திய மாணவர் முகாம்




மே 29–31, 2016 அன்று மதுரையில் நடைபெற்ற ஏஐடிஎஸ்ஓவின் மாணவர் முகாமில் தோழர் ரெங்கசாமி, மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்



மாணவர் முகாமில் கலந்துக்கொண்டோர்

அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) மே 29 முதல் 31 வரை மதுரையில் மாணவர் முகாமை நடத்தியது. திரு A ரெங்கசாமி, மாநிலச் செயலாளர், தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), முகாமைத் தொடக்கி வைத்தார். மாணவர் முகாமின் முக்கியத்துவம் மற்றும் இன்றைய மாணவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினை களையும் அதற்குத் தீர்வு காண்பதற்காக ஏஐடிஎஸ்ஓவை வளர்த்தெடுப்பது குறித்தும் உரையாற்றினார்.

காலை அமர்வில் விஞ்ஞான வரலாறு, விஞ்ஞான கலாச்சாரம், விஞ்ஞானமும் மூட நம்பிக்கைகளும் போன்ற தலைப்புகள் குறித்த குழு விவாதம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாணவ மாணவியரின் புரிதல்கள் மற்றும் கேள்விகளுக்கு பேராசிரியர் கே யோகராஜன், பிரேக்த்ரூ சயின்ஸ் சொசைட்டி, மாநிலக் கமிட்டி உறுப்பினர் விளக்கம் அளித்தார். விஞ்ஞானம் என்றால் என்ன? விஞ்ஞான பூர்வ சிந்தனை என்றால் என்ன? மனித குல முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் எப்படி அவசியமானது என்பது குறித்தும் அவர் விவாதித்தார்.

அனைவருக்குமான மதச்சார்பற்ற, விஞ்ஞான பூர்வ, ஜனநாயகப்பூர்வ கல்வி என்றால் என்ன என்ற தலைப்புகளிலும் அதோடு வாழ்க்கைக்கான போராட்டத்திற்கு தங்களைத் தாங்களே தயார் படுத்திக்கொள்ள சாமானிய மக்களுக்கு உதவாத, குண வலிமையை, மனிதகுலத்திற்கு நன்மை செய்யும் உத்வேகத்தை (இரக்க சுபாவத்தை), சிங்கம் போன்ற தைரியத்தைக் வெளிக்கொண்டு வர முடியாத கல்விக்கு, கல்வி என்ற அப்பெயர் தான் தகுமா? "இந்த நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் பசிப்பிணியிலும் அறியாமை இருளிலும் நீண்ட நாட்களாக வாடி வதங்கி வருகையில் அவர்களது உழைப்பின் பயனால் கல்விகற்று அவர்களைப் பற்றி கொஞ்சமும் சிந்தியாதிருக்கும் ஒவ்வொருவரையும் நான் துரோகி என்றே சொல்லுவேன்' போன்ற விவேகானந்தரின் பொன்மொழிகள் குறித்தும் குழுவிவாதம் நடைபெற்றது.

குழுவிவாதங்களிலிருந்து மாணவ, மாணவியர் முன்வைத்த கேள்விகளில் அனைவருக்குமான மதச்சார்பற்ற, விஞ்ஞானபூர்வ ஜனநாயகப்பூர்வ கல்வி குறித்த கேள்விகள் குறித்து திரு எஸ் ரெகுரதிப் பாண்டியன், ஏஐடிஎஸ்ஓ மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் பேசினார்.

விவேகானந்தர் பொன்மொழிகள் குறித்து வந்த கேள்விகளுக்கு எம் ஜெ வால்டேர், ஏஐடிஎஸ்ஓ, மாநிலச் செயலாளர், விளக்கமளித்தார். நாட்டின் இன்றைய கலாச்சாரச் சூழல் குறித்தும் மறுமலர்ச்சிக் காலகட்டத்திலும் விடுதலைப் போராட்ட காலகட்டத்திலும் நாட்டின் முன்னோடி களாக இருந்த ராஜாராம் மோகன்ராய், வித்யாசாகர், விவேகானந்தர், குதிராம் போஸ், பாரதியார், பகத்சிங், நேதாஜி ஆகியோர் வகுத்துக் கொடுத்த உயர்ந்த அறநெறி வாழ்க்கை குறித்தும் உரையாற்றினார். இடையில் மாணவ மாணவியருக்கு திரு ஜெயக்குமார் நாடகங்கள் உருவாக்குவது குறித்து பயிற்சி அளித்தார். பின்னர் "The Boy in the Striped Byjamas" என்ற படம் திரையிடப்பட்டது.

சினிமா, இலக்கியம் மற்றும் ஊடகங்கள் குறித்த கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. இன்றைய சினிமாக்கள் எப்படி வன்முறை மற்றும் வக்கிர உணர்வை பரப்பிவருகின்றன, இளம் பிஞ்சு உள்ளங்களைக் கூடப் பாழாக்குகின்றன என்பது குறித்தும் நல்ல கலைகளைப் படைக்க கூடி முயற்சிக்க வருமாறும் ஹில்டா மேரி, ஏஐஎம்எஸ்எஸ், மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் அழைப்புவிடுத்தார்.

கல்வி மீதான தாக்குதல்கள் குறித்து எஸ் எச் திலகர், ஏஐடிஎஸ்ஓ, மாநிலத் தலைவர், உரையாற்றினார். சுதந்திரத்திற்கு பிறகு அமைக்கப் பட்ட கோத்தாரி கமிஷன் கல்விக்கு மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதை கடுமையான வரி விதிப்பு என்று கண்டித்ததோடு, மத்திய பட்ஜெட்டில் கல்விக்கு 10% நிதி ஒதுக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்தது. ஆனால் அப்பரிந்துரையை கிடப்பில் போட்டது மத்திய அரசாங்கம்.

1986இல் புதிய கல்விக்கொள்கையைக் கொண்டு வந்து கல்வியை முதலீடு செய்து லாபமீட்டும் துறையாக அறிவித்தது. அன்றுமுதல் இன்றுவரை வரும் கல்விச் சீர்திருத்தங்கள் அனைத்தும் சாமானிய மக்களுக்கு கல்வியை எட்டாக்கனியாக்குவதோடு லட்சக்கணக்கில் பணம் செலவழிக்கவல்லவர் களுக்கே கல்வி என்ற சூழலை உருவாக்கிவிட்டது என்றார். அதோடு 8ஆம் வகுப்பு வரை பாஸ்பெயில் முறையை நீக்கி, கல்வித் தரத்தை சீரழித்துவிட்ட தையும் எடுத்துக்கூறினார். 10 மற்றும் 12ம் வகுப் பிற்கான பொதுத் தேர்வுகளை நீக்குவதற்கு முயற்சிகள் நடப்பதையும் இந்நிலையில் தேசிய தகுதித்காண் மற்றும் நுழைவுத் தேர்வு மெரிட் என்ற பெயரில் அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் போக்கு பாசிசத்திற்கான அபாயம் என்றும் விவரித்தார். முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் அமுல்படுத்திய அதே கல்வி தனியார்மய, வியாபாரமயக் கொள்கையை பின்பற்றும் பாஜக அரசாங்கம் தற்போது புதிய கல்விக் கொள்கை 2016 என்ற பெயரில் மதவாதக் கருத்துக்களையும் சமஸ்கிருதத் தையும் திணிப்பதிலும் அனைத்து நவீன விஞ்ஞானங்களும் புராணங்களிலேயே உள்ளது என்றும் பொய்யான கருத்துக்களையும் பாடத் திட்டத்தில் கொண்டுவர முயற்சிப்பது குறித்தும் விளக்கினார். இதற்கு எதிராக மாணவர்கள் ஒன்றுபட்டு அணிதிரளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியில், மாணவ மாணவியர் கல்விச் சீரழிவை எடுத்துக்காட்டும் இரண்டு நாடகங்களை நடித்துக் காட்டினர். முகாமின் நிறைவு விழாவில் ஃபாதர் மைக்கேல் அவர்கள் பேசுகையில் 'இன்று தன்னைப்பற்றி மட்டுமே சிந்திக்கக்கூடிய கல்வி வழங்கப்படுகிறது. சமூகப் பிரச்சினைகளில் பாரா முகமாக இருக்கும்படி வளர்க்கப்படுகின்றனர். சமூக அக்கறையோடு, அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளுக்காக குரல்கொடுக்க முன்வருவதாக இந்த முகாம் திகழ வாழ்த்துகிறேன்' என்று தெரிவித்தார்.

முகாமின் நிறைவு உரையாற்றிய A ரெங்கசாமி, அவர்கள், அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளில் இன்றும் ஆரம்ப மற்றும் உயர்கல்வி என்பது இலவசமாக வழங்கப்படும் சூழலில் இந்தியாவில் கல்வி உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் கொள்ளை லாபம் ஈட்டுவதற்கான வியாபாரப்பொருளாக மாற்றப்பட்டுவிட்டது என்று விளக்கிய அவர், இன்றைய கல்வி முறையில் கலை, அறிவியல் பாடங்களுக்கு முக்கியத்துவத்தை நீக்கிவிட்டு அதனிடத்தில் தொழில்மயக் கல்வி புகுத்தப்பட்டு மாணவர்களின் சிந்தனை படைமுறைபடுத்தப்படுகிறது (Regimentation of thought). இதனால் ஒரு ஒருங்கிணைந்த சிந்தனை என்பது அழிக்கப்பட்டு பாசிசத்தை கொண்டு வருவதற்கான சூழலை ஆட்சியாளர்கள் உருவாக்கி வருகின்றனர். மாணவர்களின் கடமைகள் குறித்தும் உயர்ந்த ஒழுக்க நெறி அறநெறிக் கலாச்சாரத்தின் அடிப்படையில் மாணவர் இயக்கங்களைக் கட்டி யெழுப்ப ஏஐடிஎஸ்ஓ வைப் பலப்படுத்த முன்வரு மாறும் மாணவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.




அன்னிய நேரடி முதலீட்டு உச்சவரம்பை மத்திய அரசாங்கம் அதிகரித்ததற்கு எதிராக மத்திய பிரதேசத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஜூன் 30ல் ஆரோனில் (மேலே) ஜூன் 28ல் குவாலியரில் (கீழே)

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

## ஏஐடிஒய்ஓவின் 50ம் ஆண்டு

# இளைஞர்களின் கலாச்சாரத்தை உயர்த்த, வேலைவாய்ப்பு, மதுஒழிப்பு போன்ற கோரிக்கைகளுக்காக போராட அறைகூவல்




ஜூன் 25, 2016 அன்று கொல்கத்தாவில் ஏஐடிஒய்ஓவின் 50ம் ஆண்டையொட்டி இளைஞர்




ஜூன் 25, 2016 அன்று கொல்கத்தாவில் ஏஐடிஒய்ஓவின் 50ம் ஆண்டையொட்டி இளைஞர் பேரணியில் தமிழ்நாட்டிலிருந்து கலந்துக்கொண்டோர்



கொல்கத்தாவில் ஏஐடிஒய்ஓவின் 50ம் ஆண்டு போராட்டத்தின் புகைப்பட கண்காட்சி






ஜூன் 25, கொல்கத்தாவில் ஏஐடிஒய்ஓவின் பொதுக்கூட்டத்தில் தோழர் சௌமன் போஸ், மத்தியக் கமிட்டி உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார், மேடையில் ஏஐடிஒய்ஓவின் தலைவர்கள், பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டோர்




ஜூன் 26, 2016 அன்று கொல்கத்தாவில் ஏஐடிஒய்ஓவின் 50ம் ஆண்டையொட்டி நடைபெற்ற பிரதிநிதிகள் கூட்டத்தில் தோழர் மணிக் முகர்ஜி உரையாற்றுகிறார்

தோள்வலிமையும் படைப்பாற்றலும் போராட்ட உணர்வும் கொண்டது இளமை. நம்பிக்கைகளாலும் சாகசங்களாலும் மகிழ்ச்சியாலும் நிரம்பிய பருவம் இளம் பருவம். அனைத்து சமூக இயக்கங்களிலும் தங்களின் மாபெரும் முக்கியத்துவத்தையும் பங்கையும் ஆற்றிக் காண்பித்தவர்கள் இளைஞர்கள். நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்த மாபெரும் ஃபிரெஞ்சு ஜனநாயகப் புரட்சியில் தன்னிகரற்ற பங்கு வகித்தவர் இளைஞர். நமது நாட்டின் விடுதலை இயக்கத்தில் குதிராம், சுப்பிரமணிய பாரதி, பகத்சிங், நேதாஜி என முற்போக்கு பாத்திரத்தை வகித்தவர்கள் இளைஞர்கள்.

அத்தகைய இளைஞர் சக்தியை ஒன்றிணைக்க வேண்டும். சுரண்டலையும் அடக்கு முறையையும் அநீதியையும் எதிர்த்து போராடி ஓர் உன்னத சமுதாயத்தை, சோசலிச சமுதாயத்தை படைக்கவல்ல சக்தி இளைஞர் சக்தி என்பதை காண்பித்தவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள். விடுதலைப் போராட்ட வீரரும் இக்கால கட்டத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் **1966**ம் ஆண்டு ஜூன் **26** அன்று இந்தியாவின் ஒரே உண்மையான புரட்சிகர இளைஞர் சங்கமான அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கத்தை உருவாக்கினார்.

அன்று முதல் இன்றுவரை இளைஞர்களின் கௌரவமான வாழ்க்கையை உயர்த்திப்பிடித்து, அனைவருக்கும் வேலை, மது போதை அபாயத்திற்கெதிராக, ஆபாசம், பெண்கள் மீதான வன்முறைக்கெதிராக மற்றும்பிற எரியும் பிரச்சினைகளுக்கெதிராக போராடும் ஒரே அமைப்பான ஏஐடிஒய்ஓ (AIDYO)வானது தனது 50வது ஆண்டை கொண்டாடுகிறது.

ஏஐடிஒய்ஓவின் ஸ்தாபக தினமான ஜூன் **26**ம் நாளை நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டதைப் போலவே மத்திய நிகழ்ச்சியாக கல்கத்தாவிலும் அனுஷ்டிக்கப்பட்டது. ஜூன் **25**ம் நாள் ஒரு உயிர்துடிப்புமிக்க நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இளைஞர் பேரணியானது ராஜா சுபோத் மாலிக் சதுக்கத்திலிருந்து கல்கத்தாவின் இருதயமான எஸ்பிளனேடை அடைந்தது. அங்கு இளைஞர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் சோமன் போஸ் அவர்களும் ஏஐடிஒய்ஓவின் அகிலஇந்திய தலைவர் தோழர் பி ஆர் மஞ்சுநாத் அவர்களும் பொதுச் செயலாளர் தோழர் பிரதீபா நாயக் அவர்களும் மற்றும்பலரும் பேசினர். அக்கூட்டத்திற்கு ஏஐடிஒய்ஓவின் அகில இந்திய துணைத் தலைவர் தோழர் மொகையுதீன் மன்னன் தலைமை தாங்கினார்.

ஸ்தாபக தினமான ஜூன் **26**அன்று மத்திய அலுவலகத்தில் அமைப்பின் கொடி ஏற்றப்பட்டது. அங்கிருந்து நகரின் வடஎல்லையில் அமைந்துள்ள பாரா நகரிலுள்ள ரவீந்திர பவனுக்கு நன்கலங்கரிக்கப்பட்ட மோட்டார் பைக் ஊர்வலம் சென்றது. அங்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் சத்தியவான் அவர்களால் பிரதிநிதிகள் கூட்டம் துவக்கி வைக்கப்பட்டது. அக்கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் உரையாற்றினார். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் பொலிட் பீரோ உறுப்பினர் தோழர் மணிக் முகர்ஜி அவர்கள் நிறைவுரையாற்றினார். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் சாயா முகர்ஜி அவர்களும் பிற அகில இந்திய தலைவர்களும் உரையாற்றினர்.

இவ்விரண்டு கூட்டங்களிலும் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

## ஆகஸ்ட் 5

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

தோழர் **சிப்தாஸ் கோஷ்** அவர்களின்

நினைவுதினம் அனுஷ்டிப்போம்

## பொதுக்கூட்டம்

**13.08.2016 (சனிக்கிழமை)** **கோரிப்பாளையம்**

**மாலை 6 மணி** **மதுரை**

சிறப்புரை : தோழர் **C K லூகோஸ்,** மத்தியக் கமிட்டி உறுப்பினர், **SUCI (C)**

தலைமை : தோழர் **A ரெங்கசாமி,** மாநிலச் செயலாளர் தமிழ்நாடு, **SUCI (C)**

***அனைவரும் வருக!***

---

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்
Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org